உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 34 | ஆனந்த - பங்குனி - 10—3—75 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## மழை பொழியட்டும்! —
## —பாவங்கள நீங்கட்டும்!

"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்று பழந்தமிழ் பாடுகின்றது; மாநிலத்திற்கு இன்றியமையாத மழை மிகுந்து பெய்தால் பயிர்கள் மூழ்கி அழிந்துவிடுகின்றன. மழை பெய்யாவிட்டாலோ நிலம்வறண்டு, பயிர்கள் வாடுகின்றன; உணவுப்பொருட்கள் கிடைக்காமல் உயிர்கள் வாடுகின்றன. மழை பெய்யாமற் போதற்கு என்னகாரணம் என்ற சிந்தனை மக்களுக்கும் உண்டாகின்றது. அதிகமழை, மழையின்மை, விளைந்தகாலத்தில் பயிர்களைச் சிதைக்கும் எலி, விட்டில், கிளி முதலியன நாட்டிற்குத் தீங்கு பயப்பவை என்று கூறுவர்.

மழை பருவத்திலே அளவாகப் பெய்வதால் உலகு நற்பயன் பெறும்; பெய்யவேண்டிய பருவத்துப் பெய்யாது பொய்த்து

விடுவதாலும், பெய்யவேண்டாத பருவத்துப் பெய்து விடுவதாலும், உலகு இருவகைப் பயன்களையும் எய்தும்; இதனையே திருவள்ளுவதேவ நாயனாரும்,

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்பார்; "அடிக்கிற கையே அணைக்கும்" என்ற பழமொழி போன்றதே இது எனல் மிகையாகாது.

பாவ புண்ணியக் கோட்பாடு :

பாவ புண்ணியங்களைப் பற்றிய நம்பிக்கை உலகப் பெருநாடுகள் பலவற்றிலும் உண்டு. அனைத்துச் சமயங்களிலும் பாவ புண்ணியக் கோட்பாடு பரவலாக உள்ளது. பாவங்கள் மனிதனால் அறியாமையின் விளைவாகச் செய்யப்படுகின்றன. உணர்ந்து திருந்த வாய்ப்பும் இறைவனால் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாவத்தை மேலும் மேலும் செய்வோரே உலகிடைப் பலர். செய்த பாவத்தை உணர்ந்து திருந்திய உள்ளத்தராகி வாழ்வோர் உலகிடைச் சிலரே. இவ்வாறு பிழை செய்து உணர்வோரை இறைவனுடைய பெருங்கருணை மன்னித்து ஆட்கொள்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக அண்மையில் பெய்த பெருமழை விளங்குகிறது.

அம்மையப்பன் பெருங்கருணை :

உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக இருக்கும் இறைவன் தன் பிள்ளைகள் அறியாமற் செய்த பிழைகளை, அவர்களது மனமுருகி வேண்டும் வேண்டுகோட்கிரங்கிப் பொறுத்துக் கொள்ளுகின்றான்; மேலும் திருந்தச் சந்தர்ப்பம் தருகின்றான். குழந்தைகள் செய்யும் தவறுகளை எப்போதும் எண்ணிக்கொண்டு வன்மம் பாராட்டும் பெற்றோர் எங்கும் இலர். அதுபோன்றே தன் அன்புக் குழந்தைகளாகிய உயிர்கள் செய்யும் பிழைகளையும் பேரருளாளனாகிய பெருமான் மன்னிக்கின்றான்;

"அம்மை யப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக"

என்று சாத்திரம் சாற்றும்.

"அப்பன் நீ அம்மை நீ" என்று பாடும் ஆளுடைய அரசர்,

"ஆறாத ஆனந்தத் தடியார் செய்த
அனாசாரம் பொறுத்தருளி, அவர்மேலென்றும்
சீறாத பெருமானை"

என்று கூறி உருகுகின்றார். பல்வேறிடங்களில் இறைவன் திருக் கருணையை எண்ணி, எண்ணி வியந்து பாடிய ஆளுடைய அரசர், "ஐய ஐயோ எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே" என்று தம்மை மறந்து பாடும் பகுதியும் தாண்டகத் தமிழுள் உண்டு.

பாவிகள் திருந்த வாய்ப்புண்டு ;

செய்த பாவத்தை உணராதவர் திருந்துவதற்கு இடமே இல்லை. அவரையும் விட்டுவிடாமல் திருத்தித் திருத்திப் பார்க் கின்றானும் இறைவன் ;

" திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை
இடங்கொள் கயிலாயா "

என்று உருகுகின்றார் சுந்தரர்பிரான். மேலும் திருத்திப்பார்த்துப் பொறுத்திருக்கின்றானும் கடவுள். அதனையே தங்கட்குச் சாதக மாக்கிக்கொண்டு பாவச் செயல்களில் மேலும் மேலும் ஈடுபட்டுக் கழுவாயற்ற நிலைக்குக் கவலையில்லாதபடி விரைந்து கொண்டு செல்லும் பலரையும் உலகிடைக் காண்கின்றோம். அவ்வாறு பாவமே உருவாக இருப்பவர்களைப் 'பாவி' என்ற சொல்லாற் கூறுதல் வழக்கு.

திருக்குறளில் இரு பாவி'கள் :

அழுக்காறு என்ற குணத்தைத் திருவள்ளுவர் குறிக்கும் போது, வேறு சொல்லால் குறிக்காமல் 'பாவி' என்ற சொல் லால் குறித்துள்ளமை அறிவுடையுலகம் அறிந்ததே.

" அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும் "

இவ்வாறே நல்குரவு என்னும் வறுமையையும் 'பாவி' என்ற சொல்லாற் குறித்துள்ளது வாயுறை வாழ்த்து.

" இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் "

மழையறுக்குங்கோள் மூன்று :

இவ்வாறு பாவம் செய்யும் கொடியவர் மிகுந்து இருப்பதா லேயே உலகில் மழை பெய்யவில்லை என்பது தமிழ்ச் சான்றோர்

கருத்து. பாவஞ்செய்யும் கொடியவர்களை 'மழையறுக்குங் கோள்" என்று பாடுகின்றது பதினெண்கீழ்க் கணக்குப் பாட்டொன்று.

தான் கொள்ளக்கூடிய வரிப்பொருளுக்காகக் குடிமக்களை வருத்தும் அரசன், உண்மை சொல்லாது பொய்யே புனைந்து பேசும் பாவ வடிவாகிய வஞ்சனை மக்கள், இல்லிலிருந்து கொண்டே ஒழுக்கம் பிழைக்கும் பெண்-ஆகிய மூவரும் மழையைப் பெய்யாமற்றடுக்கும் தீய 'கிரகங்கள்' என்ற கருத்தை அப்பாடல் நயமாகக்கூறும்.

" கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்து எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழை யறுக்குங் கோள் "

## கொடும்பாவி எரிக்கும் உயர் கொள்கை :

இம்மூவருள்ளும் 'நடுநாயகமாக' வைத்தெண்ணப்பட்டவர் பாவிகளேயாதல் அறியத்தக்கது. மழை பெய்யாவிட்டால், "கொடும்பாவி" கட்டி இழுத்துச்சென்று எரியூட்டும் வழக்கு நம் நாட்டில் இன்றும் உள்ளது. பாவஞ் செய்வோர் மிகுதிப் படுவதாலேயே மழை பெய்யவில்லை என்று நம்பி இன்னர் என்றில்லாமல் எல்லாரும் கூடிப் பாவஞ்செய்வோரை உருவகப்படுத்திக் கொண்டு, 'ஒரு கொடிய அரக்கனாக' உருவமைத்து அதனைத் தீயூட்டிப் பாவச் செயலை அழிப்பாராகக் கருதிக் கொள்ளும் நிலை கல்வியறிவில்லாத எளிய மக்கள் மாட்டும் காணப்படுகிறது; இது உயர்ந்த தத்துவக் கருத்தையும், தமிழ்ச் சான்றோர் கோட்பாட்டையும் எளிதாக மக்கள் ஏற்றுக்கொண்டு செயற்பட்டுவருவதைக் காட்டுகின்றது.

" நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை "

என்பர் ஔவையார். தவவொழுக்கமும், உலகு வாழவேண்டும் என்ற ஒப்பற்ற பெருங்கருணையும் உடைய சான்றோர்கள் நாட்டில் வாழ்வதாலேயே மழை பொழியும் என்று உணர்தல் வேண்டும். "பண்புடையார் வாழ்வதாலேயே உலகம் வாழ்கின்றது ; இல்லையேல் மண்ணுக்குள் புக்கு மாய்ந்துபோகும்" என்னும் திருக்குறட் கருத்தும் இங்கு ஒப்பிட்டுணர்தற்குரியது. நல்லோர் தம் நல்ல எண்ணங்கள் நிலைப்பதால், அவற்றிலிருந்துபரவும் நுண் அணுக்கள் எங்கும் பரவி நன்மைசெய்கின்றன என்று விஞ்ஞான அடிப்படையில் இதனை விளக்கலாம்.

" தெய்வந் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை "

என்ற குறட் கருத்தினையும் இந்த அடிப்படையில் நோக்குதல் வேண்டும். ஆகவே, திங்கள் மும்மாரி இத்தகு நல்லோராலேயே பெய்கின்றது என்ற விவேகசிந்தாமணிபாடற் கருத்து நாம் சிந்தித்துக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

" வேதம் ஓதிடும் வேதியர்க்கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கோர் மழை
மாதர்கற் புடைமங்கை யர்க்கோர் மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே "

## அறிவியல் நாடுகளும் மழை வேண்டலும் :

மழை பெய்விக்க அறிவியலில் மேம்பட்ட நாடுகளாகத் தம்மை வருணித்துக்கொள்ளும் நாடுகளில்கூடச் சில நம்பிக்கைச் செயல்கள் நடந்துவருகின்றமை எண்ணத்தக்கது. ரஷ்யாவில் மிக உயர்ந்தமரத்தில் மூவர் ஏறி, ஒருவன் தப்பட்டையை ஒலிக்க மற்றவன் தீப்பந்தங்களை ஆட்டி, ஒருவன் தண்ணீரை இலைக் கொத்தாலே கீழே தெளிப்பான்; இடித்து மின்னி மழை பொழிவதாகக்கற்பனை இவ்வாறு செய்தால் மழைவந்துவிடும் என்பது இவர்கள் நம்பிக்கை. தண்ணீர்த் தொட்டியைச் சுற்றி ஆடிப்பாடும் ஒருவகை முறை வட அமெரிக்காவில் உள்ளது என்பர். மெக்சிகோ இந்தியர் எங்கும் புகை மூட்டம் போட்டு மழை வர வழைக்க முயல்வர். பஞ்சாப்பில் வயதுவந்த கிழவி ஒருத்திக்குச் சினம் உண்டாக்கி அவளது ஏச்சுரையை எழுப்புவர். அதற்கு நாணி மழைவரும் என்று நம்புவர். ஜாவாவில் கறுப்பு ஆண் பூனை, கறுப்புப் பெண் பூனைகளை ஒன்றாக ஊர்வலம் வருமாறு செய்தால் வருணபகவான் வேடிக்கை பார்க்க மழையாக வந்து விடுவான் என்று நம்புவர்.

சீனாவில் மழைக்கடவுளைப் பொம்மையாகச்செய்து ஊர்வலம், வழிபாடுகள் நடத்துவர். வழிபாடுமுடிவதற்குள் மழை வந்தாக வேண்டும். இல்லையேல் அந்தப் பொம்மையை அடித்து நொறுக்கிச் சிதைத்துவிடுவார்கள். இவ்வாறு பல்வேறு நாடுகளிலும் பல்வேறு நம்பிக்கைகள் உள்ளன. (இவற்றின் விரிவை, 'நாடோடி' எழுதிய மழை வேண்டுமா? என்ற கட்டுரை (கல்கி-மலர் 34 - இதழ் 30) யிற் காணலாம்.) இந்த நம்பிக்கைகளில்

எல்லாம் சிறந்த ஒன்ருக நம்நாட்டுக் கொடும்பாவி யிழுத்தல் அமைந்துள்ளது என்பதை விளக்கவே இவை எடுத்துக்காட்டப் பட்டன.

## செயற்கை மழை பெய்விக்கும் மனித முயற்சி :

செயற்கை முறையில் மழை பெய்விக்கும் முயற்சி, ரஷ்யா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் நடந்துள்ளது. திடவடிவத்தில் உள்ள கார்பன்டையாக்சைடை ஏற்ற மேகத்தின் மீது தூவிவிடுவது ஒருமுறை. இதை விதை யிடுதல் ( Seeding ) என்பர். மிக்க குளிர்ச்சியான திட கார்பன் டையாக்சைடு மேகத்தினூடே செல்லும்போது எண்ணற்ற பனிக் கட்டிப் படிவங்களை உண்டாக்கி மழைபெய்யச்செய்யும். இது செலவு மிகுதியான முறை. தரையில் உள்ள எந்திரங்களைக் கொண்டு புகைபோன்ற வடிவில் வெள்ளி அயோடைடைக் கொண்டு மேகத்தின்மீது விதைத்து மழைபெய்யச் செய்யும் முயற்சி அமெரிக்கரால் செய்யப்படுவது. இது பன்முறைநிகழ்ந்த போதும் வெற்றிபெறவில்லை. சென்னை மாநிலத்தில் கூனூரில் செயற்கை மழை பெய்விக்கும் முயற்சியும் நடைபெற்றுள்ளது. ( பார்க்க :- கலைக் களஞ்சியம் – Vol. VIII. பக்கம். 190. )

இச்செயற்கைமுறைகள் சரியாகப்பயனைத்தரவில்லை என்பது அறிஞர்கள் கருத்து.

## நல்லறச் செழிப்பே நன்மைக்கு வழி :

வேதத்திற் கூறியபடி வேள்விகளை முறைபிறழாது ஆற்று வதும், திருமுறைகளில் அமைந்த மேகராகக் குறிஞ்சிப் பண்களை உளமார ஓதுவதும், நீரில் நின்று வருண ஜபம் செய்வதும், பாரதத்தே அமைந்த விராடபருவப் பகுதியைத் தக்கோர் பாரா யணம் செய்வதும் ஆகிய பழைய மரபுகளின் வழி மழைக்கான முயற்சிகளை மேற்கொண்டு மழை பெற்று இன்புற்று வாழ்ந்த நம் நாட்டில், மீண்டும் இத்தகைய வைதிக வழி முறைகளை மேற் கொண்டு இறையருளை வேண்டுவது நம் கடன். பாவச் செயல்களைக் குறைப்பதும், நல்லறச்செயல்களை மிகுவிப்பதும், அறநிலையங்களைப் பேணிப் பாதுகாப்பதும், அறவழிப்பட்ட சிந்தனைகளை இளைஞர் முதல் எல்லோரும் கொண்டு ஒழுக்க சிலராக வாழ்வதும், நல்ல மழை பொழிந்திட, இறையருள் பெற்றிட நம் முன் நிற்கும் கடமைகள். இவற்றைக் குறைவறச் செய்துவந்தால், திங்கள் மும்மாரி பெய் யும்; நாடு செழிக்கும் என்பது துணிவு.

# ‘பெரும் பெருமான்’ (1)

தொண்டைமண்டலாதீனம். மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

காஞ்சீபுரம்

வடமொழியிலே ‘மஹா மஹோபாத்தியாய’ என்னும் வழக்கு உண்டு. அதனைத் தமிழிலே ‘பெரும்பேராசிரியர்’ என்பர் புகழுடலெய்திய உ. வே. சாமிநாதஐயரைக் குறித்துப் பாடியதொன்றினுள் “பெரும் பேராசிரியர் வழங்குமநுமதி யடைந்தேன்” என்றதும் அறிக. உபாத்தியாயன் என்றதன் பொருள் மாணாக்கன் கற்றல் வேண்டி, அவனுடன் கற்பவன் (ஆசான்) என்பது. மஹோபாத்தியாயன் எனின் பேராசிரியன் என்றதாம். மஹா மஹோபாத்தியாயன் எனின், பெரும்பேராசான் என்றும். அவ்வாறே மகன்–(மான் – மரூஉ, மகன் –) தேவன், மகள் – தேவி, நாமகள் - கலைமகள் – சரசுவதிதேவி, திருமகள் – இலக்குமிதேவி, மலைமகள்– பார்வதிதேவி, மலை - பர்வதம், பெருமகன் (பெருமான், பெம்மான் – மரூஉ) மஹாதேவன், பெரும் பெருமான்–மஹா மஹாதேவன், மகன், மகள் இரண்டும் முறையே தேவர்க்கும் தேவியர்க்கும் பொதுச்சொல். மஹாதேவ சப்தம் சிவபெருமானுக்கே சிறப்புத் திருப்பெயர். தமிழ் நாட்டுச் சிவ தலங்களை வட நாட்டார் வழிபடும் போதில், ‘மஹாதேவாலயம்’ என்றே வழங்குவதை இன்றும் கேட்டறியலாம்.

மஹா மஹாதேவன் என்பது அச்சிவம் குருவாகி வந்து அருள் புரியும் அவசர கோலத்தின் திருப்பெயர் என்க. எனவே சிவபெருமானிருக்கும் கோலத்தின் திருப்பெயர் மஹாதேவன் என்பதும், அச்சிவமே குருவாய் வந்தருளும் அவசர கோலத்தின் திருப்பெயர் மஹாமஹாதேவன் என்பதும் பழைய மரபு.

அத்தகைய சிறப்பிற்குக் காரணம் யாது? 1 சிவமாயிருத்தல் 2, குருவாய் வருதல் என்னும் இரண்டனுள். (1) முதல்நிலை (சிவமாயிருத்தல்) உயிர்க்குயிராயும் உணர்வுக்குணர்வாயும் என்றும் இருக்கும் நிலை. (2) இரண்டாவது நிலை (குருவாய் வருதல்) பக்குவம் உடைய உயிர்க்கு அவ்வுயிரின்கண் புலப்பட்டு உணர்த்தும் தொழிலினவே ஆம். ஆயினும் சிவம் பொதுவில் உணர்த்தி

நிற்கும், குரு சிறப்பில் உணர்த்தும். அபக்குவ நிலையினும் பக்குவம் உண்டாக உணர்த்துவது சிவம், பக்குவ நிலையில் பொருள் நன்கு புலப்பட்டு விளங்க உணர்த்துவது குரு.

சிவம் அநாதியாய் உயிருடன் இருந்து உணர்த்தியும் அவ்வுயிர் பிறவி தீர்ந்தபாடில்லை, குரு ஆதியாய் தோன்றிச் சிறப்பின் உணர்த்தானுக்கிப் பிறப்பையறுத்துப் பேரின்பம் அருளும் பெருமை சான்றது ( சாலப் பெரியார் ), சிவம் அகளம், குரு சகலம். அகளம் காண்டற்கரிய கடவுள் நிலை, சகளம் ஞானத்தால் காணத்தக்க ஞானரூபமாய் அறிவின்முன் நின்று மலம் அகற்றித் தானுக்கி மலரடிக் கீழ் வைப்பது.

இவ்வுண்மையைச் சிவஞான சித்தியாரிலே,

" துன்னிய ஐம்புல வேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயர் உறுந் தொல்லுயிரை
மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் (-ஐம்புலவேடரின் நீக்கி)
மலம் அகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன் "

அருட்குரு - ஞானகுரு. யோககுரு, கிரியாகுரு, சரியாகுரு, மூவரையும் நீக்கிய விசேடணம்,

திருவுந்தியாரிலே அகளமாய் ஆரும் அறிவரிது அப்பொருள் என்று சிவத்தையும், " சகளமாய் வந்தது தானுகத் தந்தது " என்று குருவையும் உபதேசித்தவாறு காண்க.

எல்லா உயிரோடும் சிவம் என்றும் இருந்தும் உயிர்க்குப் பிறப்புநீங்கியபாடில்லை; குருவாய்வந்து உபதேசித்துப் பிறப்பை அறுத்து ஆட்கொண்டு பேரின்பளித் தருள்வதால் குருவே சிவத்தினும் பெரிது. இவ்வுண்மையைப் பல நூல் உணர்த்துகின்றன. துகளறுபோதம் (86) மிகச்சிறந்த சிவஞானப் பனுவல், சிற்றம்பல நாடிகள் அதில்

" அன்று முதலாகவே ஆருயிர்கட் காருயிராய்
நின்றருளுந் தம்பிரான் நீங்காமல் என்றும்
கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ "

எனச் சிவபெருமானைக் குறித்து வினவியருளினர். மேல் "தாமே குருவாய் அருளாமற் கூறு " எனக் குருவைத் தெரித்தருளினர். இங்கே திருமூலநாயனுர் அருளியதை யுணர்தல் மிக்க தெளிவூட்டும்.

' சிவனை வழிபட்டார் எண்ணிலி தேவர்
அவனை வழிபட்டு இங்கு ஆமாறென்றில்லை
அவனை வழிபட்டு அங்கு ஆமாறு காட்டுங்
குருவை வழிபட்டாற் கூடலும் ஆமே "

என்ற திருமந்திரத்திலே குருவையும் சிவனையும் பிரித்துக் கூறியும் இங்கு அங்கு என இட வேறுபாடு காட்டியும் வழிபாட்டின் பயனும் அஃது இன்மையும் நன்கு தெரிந்தமை காண்க. " குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிதலே கிளவி " என்றது தொல்காப்பியம்.

திருக்களிற்றுப்படியாரிலே அகளமயமான சிவத்தைப் ' பெருவடிவு ' என்றதும், சகளமயமான குருவைப் " பாகத்து அருள் வடிவும் தானும் ஆய் ஆண்டிலனேல் " என்றதும் அறிக.

சிவம் என்றும் உயிர்க்குயிராயிருப்பது, குரு ஓர் அவசரத்தில் தோன்றித் தனக்கு உறையுளான உயிரை ஆண்டு கொண்டது. அதனால், குருவையே சமயகுரவரும் சந்தான குரவரும் , ஆண்டவன் ' என இறந்தகால வினைச் சொல்லாற் குறித்தருளினர்.

" கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க "

" பாகத்து அருள் வடிவுந் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார் ? பேசு, "

" சகலமயம் போல் உலகில் தங்கிநிகளமாம் ஆணவ
[மூலமலம் அகல
ஆண்டனன் தான் மாணவக என்னுடனாய் வந்து, "

" ஐயன் அருட் கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்
பைய விளையும் எனப் பார், "

" உள்ளத்தின் நின்றும் ஒளித்தான் பரன்; குரவன்
கள்ளந் தனைத் தவிர்த்துக் * காட்டினன் - வள்ளல்
அருவான கோலமோ ஆதி கோலங் காட்டுங்
குருவான கோலமோ கூறு, " ( அமுத சாரம் 183).

---

* இறந்தகால முற்று.

இவ்வெண்பாவிற் பாட பேதம் வெவ்வேறிடத்தில் வெவ் வேருய்க் காணப்படினும், பொருள் வேறுபாடில்லை, அவிரோத வுந்தியார் உரையுள் ஈரிடத்திலும் ஒன்ருயில்லை, வேறு நூலினும் மூல நூலினுள்ளவாறில்லை.

உமாபதி சிவம் அருளிய எட்டுத்தமிழ் ஞானப்பனுவலுள் ஒன்ருய போற்றிப் பஃறொடையில் ( 83 – 85 ), " என்றன் உள்ளம் என்றும் நீங்காது ஒளித்திருந்து தோன்றி நிற்கும் கள்ளம் " என்று சிவம் ஆய அகளத்தையும், ( என்றும் என்றன் உள்ளம் நீங்காது ஒளிந்திருந்து தோன்றி நிற்கும் கள்ளம் ) " இன்று காட்டும் கழலி " என்று குருவாகிய சகளத்தையும் 'போற்றி'ய உண்மை சைவர் அனைவரும் உளங்கொளத் தக்கது.

இச்சகளமான குருவைக் 'கண்டவுரு' என்றும் அகளமயசிவம் காண்டற்கரியகடவுள் என்றும் சிவானுபவச் செல்வர் வழங்கினர்.

சமயாசாரியர்மூவரும் கண்டவுருவாய குருவையே (முறையே) தோடு, கூற்று, பித்தா என்னுந் தொடக்கத்தையுடைய திருப் பதிகங்களாற் பாடி அருளினர். அகத்தியர் தேவாரத் திரட்டின் உட்கிடை யுணர்த்தும் ஆசிரியப்பாவின் முதற்கண்,

" தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரருளாகும் "

என்றுள்ளதை ஓர்க.

திருவுந்தியார் குருவைச் " சாலப்பெரியார் " என்றது, அதனு ரையாய திருக்களிற்றுப் படியார் ' பெரும்பெருமான் ' என்றது. இரண்டும் ஞான குருவையே ' மஹாமஹாதேவன் ' எனப்போற்றி யன.

( தொடரும் )


## ஞானசம்பந்தம்

### தருமையாதீனத் திங்கள் இதழ்

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | .... .... .... | ரூ. | 100—00 |
| ஆண்டுச் சந்தா | (வெளிநாடு) | ரூ. | 10—00 |
| ,, | ( சிலோன் ) | ரூ. | 7—00 |
| ,, | ( உள்நாடு ) | ரூ. | 6—00 |
| தனி இதழ் | .... .... | பைசா | 0—75 |

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 34. இதழ் 3. பக்கம் 118 இன் தொடர்ச்சி )

பூத மானவை காரி யங்கள்
 பொலிந்து மன்னி அழிந்திடும்
ஆத லால்ஒரு நாதன் இங்குள
 னென்ற றறிந்துகொள்; ஐயனே!
பேத மான கடாதி மண்ணினில
 வந்த வாறு பிடித்திடில்
கோதி லாத குலால ஞல்வரு
 செய்கை என்று குறிப்பரே. 56

## இதன் தெளிபொருள்

['பூதங்கள் தம்மில் ஏற்ற பெற்றி கூடுதலால் அவற்றின் காரியங்களாகிய உருவப் பொருள்கள் பலவும் தோன்றும்' என்று நீ கூறினை.] அப்பூதங்கள் பற்பல காரியப் பொருள்களாய்ப் பரிணமித்து, தோன்றி நின்று அழிவன ஆதலால், அவை தாமே தம்மை அவ்வாறு தோற்றுவித்தும், நிறுத்தியும், அழித்தும் செயற்படுத்திக் கொள்ளும் என்றல் பொருந்துமாறில்லை. ஆகவே, அவற்றை அங்ஙனம் செயற்படுத்தி நிற்கும் தலைவன் ஒருவன் உளன் என்று உணர்ந்து கொள்வாயாக.

இன்னும், பூதங்களாலே உருவப் பொருள்கள் பல தோன்று தற்கு. மண்ணாலே குடம் முதலிய வேறுபட்ட பல பொருள்கள் தோன்றுதலை நீ எடுத்துக் காட்டாகக் கூறினாய்; அங்ஙனம் கூறும்பொழுது, 'மண்ணால் குடம் முதலியன தோன்றுதல் அவற்றைத் தோற்றுவிப்போனாகிய குலாலன் இன்றி ஆகாது, என்பதையும் அறிவுடையோர் உடன் கூறவே செய்வர்.

## விளக்கம்

'அதனை நீ மறந்து விடுதல் கூடாது' என்பது குறிப் பெச்சம்.

பொலிதல் - புலனாதல்; தோன்றுதல். 'பொலிந்து மன்னி அழிந்திடும் ஆதலால் ஒரு நாதன் இங்குளன்' என்றது, "செயப்படு பொருளே செய்வதாயும் நிற்றல் எவ்விடத்தும் இல்லை" என்னும் முறைமையைக் குறித்தவாறு. 'குடம் முதலியன குலாலன் இன்றி ஆகாமையை உணர்த்தியதும் அம்முறைமையை நிலை நிறுத்தற் பொருட்டேயாம். "குறிப்பரே" என்னும் ஏகாரம் தேற்றம்;

இதனால், "இறை வேறுண்டென்று செப்பிடல் என்னை" என (17) அவர் கூறியதை மறுத்தார். (24)

வேதன் நாரணன் ஆர ணம்அறி
யாவி முப்பொருள் பேதைபால்
தாத னுய்இரு கால்ந டந்திடு
தோழன் வன்மைசெய் தொண்டனுக்
காத லால்அடி யார்க ளுக்கெளி
யான்அ டிக்கம லங்கள்நீ
காத லால்அணை; ஈண்டன் வேண்டின
இம்மை யேதரும் கண்டிடே. 57

## இதன் தெளிபொருள்

பிரமனும், மாயோனும் ஆகிய பெருங் கடவுளரும், வேத மாகிய பெருநூலும் அறியாது அலமர நிற்கின்ற மிக மேம்பட்ட பொருளாகிய இறைவன், அடியவர்கட்கு மிக எளியனாதல், முதற் கண் வன்மை பேசிப் பின் அடிமையான நம்பி யாரூரராகிய அடியவர் பொருட்டு. அவர் தம் மனைவியாரது ஊடலைத் தீர்க்க இருமுறை தூது நடந்து சென்ற தோழனாய் உதவினமையால் நன்கு அறியப்படுதலின், [இம்மை இன்பத்தை விரும்பியே இறை நெறியை வெறுக்கின்ற நீ] அவ் இறைவனது திருவடித் தாமரைகளை அன்போடு பற்றுவையாயின், நீ வேண்டி நிற் கின்ற இம்மைப் பயன்கள் பலவற்றையும் இப்பிறப்பிலேயே உனக்கு ஈந்தருளுவான். இதனை அறியாது நீ அவனை வெறுத் தல் வேண்டா.

## விளக்கம்

ஈற்றில் வருவித்துரைத்தது குறிப்பெச்சம். "ஈண்டன் வேண்டின என்றது, ' நீ இம்மையில் அடைய விரும்பியுள்ள பொருள்கள் ' என்றவாறு. கண்டிடு - அறிந்துகொள்; என்றது, 'அறியாமையால் நீ கொண்டுள்ள பிறப்பினை ஒழி என்றதாம்.

பொன்கு லாவும ணிக்க லன்கள்
மலம்பு கிற்கை பொருந்திடா;
மின்கு லாம்இடை யார்கள் தாம்உல
கத்தின் வேட்கை விடும்பொருள்;
புன்பு லால்மலம் மூத்தி ராதி
பொசிந்து நாறு புலைக்கலம் ;
என்கொ லாம்இவர் மேல்வி ழுந்த
இவற்றின் என்பெற எண்ணியே.? 58

## இதன் தெளிபொருள்

பொன்னாலும், மணியாலும் இயன்ற அருவிலை அணிகலன்களாயினும் அவை மலத்தில் வீழ்ந்து புதையுண்டால் அவற்றை எடுக்கக் கை வாரா. புறத்தோற்றத்தால் அழகாய்த் தோன்றுகின்ற மாதரும், உண்மையில் இழிந்த மலம், மூத்திரம் முதலிய அருவருக்கத் தக்க பொருள்கள் உள் நிறைந்து மேற்பொங்கும் பாத்திரங்களாய் அவ்வாறே வெறுக்கத்தக்க பொருளாய் இருக்க, இவர்கள்மேல் நீ விருப்பங்கொண்டது ஏன்? இந்த அருவருப்புப் பொருள்களால் என்ன இன்பம் பெறக் கருதி?

## விளக்கம்

இங்கு மகளிரது உடம்பின் இழிபினையே எடுத்துக் கூறியது, அவரை அறத்திற்கு உரிய துணைப்பொருளாகக் கருதுதலை அறவே ஒழித்து, இன்பப் பொருளாக மட்டும் கருதி, தூர்த்தைகள், வேசையர் முதலாயினரைப் பாராட்டி அவரது மயக்கில் வீழ்தலையே மக்கட் பிறப்பின் பயனாகக் கூறும் இவ்வுலகாயத மதத்தினரின் மடமையைப் போக்குதற் பொருட்டேயாம். இது, வரும் செய்யுட்கும் ஒக்கும். இல்லறத்தில் நிற்பார்க்கு இணை விழைச்சினை அறமாக அறநூல்கள் நேர்தல், பிழுக்கை வாரியும் பால்கொள்ளும் அதுபோல் தாம் நாட்டிய, அல்லது கருதிய அறங்களை நடாத்தலும், நீர்க்கடன் முதலியவற்றால் மறுமையில்

தம்மையும், தம்குடி முன்னோரையும் நற்கதியிற் செலுத்துதலும் ஆகிய செயல்களைக் கடமையாகக் கொண்டு ஆற்றுதற்குரிய நன்மக்களைப் பெறும் பயன் கருதியேயாம். இஃது,

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே ;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற தாய் ஒருத்தி கூற்றாலும் அறியப்படும். (26)

தோல்இ ரத்தம் இறைச்சி மேதை
எலும்பு மச்சை சுவேதநீ
ரால்எ டுத்த முடைக்கு ரம்பை;
அழுக்கி னோடுபு ழுக்குழாம்;
நூல்ஒ ழுக்கிடு கோழை ஈரல்
நுரைக்கு மூத்திர பாத்திரம்;
சேல்அ டர்த்தகண் ணார்கள் என்பது
தேர்ம லத்திரள் திண்ணமே. 59

## இதன் தெளிபொருள் - வெளிப்படை

மேதை – நிணம்; இதனை, 'கொழுப்பு' என்பர். மச்சை - பித்த நீர். சுவேத நீர் - வெண்பால்; சுக்கிலம். இது செம்பாலாகிய சோணிதத்தையும் ஏற்ற பெற்றியாற்கொள்ள நின்றது. தோல் முதலிய ஏழும், "சத்த தாதுக்கள் - ஏழு மூலப்பொருள்கள்" எனப்படும். இவற்றைச் சிறிது வேறுபடக் கூறுதலும் உண்டு. முடைக் குரம்பை-நாற்றம் அடிக்கும் குடிசை. குழாம் - குவியலும், கூட்டமும். நூல் ஒழுக்கிடும் - நூல்போல் இடைவிடாது ஒழுகுதலைச் செய்கின்ற. "ஈரல்" என்பது, அதன் கண் சுரக்கின்ற நீருக்கு ஆகு பெயர். 'கோழையும், ஈரல் நீரும் நுரைப்பதும், மூத்திரம் நிறைந்ததும் ஆகிய பாத்திரம்' என்க. 'சேலினை வென்ற கண்ணார்கள் என உயர் திணையாகவும், புகழ்ந்தும் சொல்லப்படினும், அவ்வாறு சொல்லப்படுகின்ற அப் பொருள் மல உருண்டை என்பதே திண்ணம்; இதனைத் தேர்வாயாக' என்க. 'சேல் அடர்த்த கண்ணார்கள் எனப்படுவதாகிய அப் பொருள், தோல் முதலியவற்றால் ஆக்கப்பட்ட தீ நாற்றம் உடைய குடிசையும், அழுக்குக்குவியலும், புழுக்கூட்டமும், கோழையும் ஈரல் நீரும், மூத்திரமும் நிறைந்து வழியும் பாத்திரமும், மலஉருண்டையும் என்பதே திண்ணம்; தேர்' என முடிக்க. (27)

(தொடரும்)

மதிப்புரை

# சித்தாந்தத் தெளிவியல்

[ ஆசிரியர் :— தருமையாதீனம் மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் ; 1968 இல் உலகத் தமிழ் மாநாட்டு மலராக வெளியிடப்பெற்றது. இதுபொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. கிடைக்குமிடம்:- செயலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமையாதீனம், மாயூரம் 609001, தஞ்சாவூர் மாவட்டம். பக்கங்கள் 260. விலை ரூ. 3—50 ].

தமிழ்ப்பெருஞ்செல்வமாகிய சைவசித்தாந்தத்தை எடுத்து விளக்கும் இனிய உரை நடை நூல் இது. சைவசித்தாந்தத்தைப் பல்லாண்டுகளாக நூல்கள், சொற்பொழிவுகள் வாயிலாகத் தமிழ்கூறு நல்உலகிற்கு வழங்கிவரும் தனித்திறன் உடைய பெரும்புலவர் இந்நூலாசிரியர்.

பொதுவியல், பதியியல், பசுவியல், பாசவியல், சாதனவியல், பயனியல் என்று பகுத்துக்கொண்டு சித்தாந்த நூற்கருத்துக்களைத்தெளிவுற எழுதியுள்ளார் ஆசிரியர். சமயங்களின் கருத்துக்கள், வேத வேதாந்த விளக்கம், தத்துவ ஆய்வின் சிறப்பு, ஏகான்ம வாதம் முதலியவற்றின் விளக்கம், நீலகண்ட பாடியம், வைணவ பாடியம், மாத்துவ பாடியம் முதலியவற்றின் கருத்து விளக்கங்கள், புறச்சமயங்களின் வளர்ச்சி, சமயாசாரியர் சந்தானசாரியர்கள் தென்னாட்டில் அவதரித்துப் பணியாற்றிய விழுப்பம், சந்தான வரலாறு முதலிய கருத்துக்கள் பொதுவியலில் அமைந்து, சைவர்கள், பல நூல்களில் அறிந்துணரத் தக்க அரும்பொருள்களை யெல்லாம் ஒருசேரத் தெளிவான, எளிய, இனிய உரை நடை வடிவில் கொண்டு திகழ்கின்றது.

சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய நூற்பொருள்களை ஐயந்திரிபற இனிது விளக்குவது. அடுத்து வரும் இயல்கள் உரை நடை வடிவில் சுவையுடன் இக் கருத்துக்களை ஆசிரியர் கதை கூறுவது போன்ற ஒரு நயத்துடன் கூறிச் சென்றுள்ள முறை பசுமரத்தாணிபோற் பயில்வோர் மனத்துப் பதியத்தக்க பாங்குடையது. தருமையாதீன முதற் பெருங்குரவர் அருளிய முத்திநிச்சயப் பொருளுடன் முடித்துள்ளார் ஆசிரியர்.

தத்துவம் கற்கும் தமிழ் மாணக்கரும், தமிழ் அறிஞரும், தவருது வாங்கிக் கற்றுப் பயன் பெற வேண்டிய இந்நூலைக்

குறைந்தவிலைக்கு அச்சிட்டுவழங்கி, விற்பனைத்தொகையை ஞானசம்பந்தம் பதிப்பக வளர்ச்சிக்கு வழங்கியருளியுள்ளார்கள், தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்.

அன்புலகம் முந்துக ; பெறுக ; பயனுறுக. என்று ஆற்றுப்படுத்துகிறோம்.

குறிப்பு: – 20 பிரதிகளுக்குமேல் வாங்வோர்க்கு 10% கழிவு உண்டு, அஞ்சற்செலவு தனி.

---

தெய்வீகச் செய்தி :

## அடங்கிப் புலப்படார் !

கடவுள் ஒருவரே ! குளிரும், காற்றும், மின்சாரமும் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்றனவன்றோ !

புஷ்பத்தின் வாசனை கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்றதல்லவா? கற்கண்டில் இருக்கும் தித்திப்பும், படிகாரத்தில் இருக்கும் கசப்பும் கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்றனவன்றோ !

சங்கீத ராகம் கண்ணுக்குப் புலப்படாது ; செவிக்குப் புலப்படும். பச்சை, சிவப்பு முதலிய வர்ணங்கள் காதிற்குப் புலப்படாது ; கண்ணிற்குப் புலப்படும் சூடு, குளிர் இவை செவிக்குப் புலப்படாது ; தொடுதலுக்குப் புலப்படும்.

இவ்விதம் உலகிலுள்ள எப்பொருளும் கண், காது, மூக்கு, நாக்கு தொடுதல் இவைகளில் ஏதாவது ஒன்றுக்குப் புலப்படுவதாகவே இருக்கிறது. கடவுள் இவற்றை எல்லாம் சிருஷ்டித்து இவற்றிற்குமேல் நிற்பவர் ஆதலால் அவர் நமது இந்திரியங்களுக்கு அடங்கிப் புலப்படார். அதுவே அவருடைய அருவத்தன்மை !

இப்படி சுவாமி சச்சிதானந்த சரஸ்வதி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

— ராஜஸ்ரீ.

நன்றி. —சுதேசமித்திரன், 10–3–75.


---

தருமையாதீனத்திற்குச் சொந்தமான
திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் நிகழ்ந்த
ஸ்ரீ அபிராமி அந்தாதி இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் ( 11—10–74 )



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
தருமையாதீன இசைப்புலவர், சீகாழி, திரு. S. கோவிந்தராசன்,
திரு. A. V. மெய்யப்பச் செட்டியார், நீதிபதி. திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார்,
H. M. V. மேலாளர், திரு. மங்கபதி ஆகியோர்களுக்குப்
பொன்னாடை போர்த்தி ஆசியருளியது.

தருமையாதீனப்பண்ணிசைப்புலவர், திரு. P. சுவாமிநாதன் அவர்களுக்கு,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் சார்பில்
"கலைமாமணி" என்ற பட்டம் வழங்கியதைச் சிறப்பிக்க,
திருமுறை வழிபாட்டுக் குழுவினர்
சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் நிகழ்த்திய பாராட்டு விழாவில்



சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி,
கனம். திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள்
பொன்னுடை போர்த்துதல்

# திருத்தொண்டத் தொகைத் திறன்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், செஞ்சொற்கொண்டல்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

(மலர் 34. இதழ் 2, பக்கம் 73 இன் தொடர்ச்சி)

## தொகையடியார்கள் :

இனி, தொகையடியார்களாக நம்பியாரூரர் நவிலும் ஒன்பான் பகுதியினர் பற்றிய தொடர்கள் சிந்தித்துக் கொள்ளத்தக்க செம்பொருள் நுட்பம் வாய்ந்தவை.

தில்லைவாழந்தணர், பொய்யடிமை யில்லாத புலவர், பத்த ராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திரு மேனி தீண்டுவார், அப்பாலும் அடிச்சார்ந்தார், முழுநீறு பூசிய முனிவர் ஆகிய தொகையடியார்களை ஆரூரர் குறித்துள்ளார். இந்நாயனர் புராணங்களைப் பாடலுற்ற சேக்கிழார் மிக நுட்ப மாக இத் தொடர்களைச் சிந்தித்துள்ளார் எனத் தெரிகின்றது.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் தொகையடியார்களைச் சுந்தரர் விளக்கியுள்ள திறம் எண்ணுந்தோறும் எண்ணுந் தோறும் வியப்பூட்டுவதாக உள்ளது "உலகத்தில் பக்தியோடு பணிகின்ற அடியார்கள் எங்கெங்கே உண்டோ, அவரவர்க் கெல்லாம் நான் அடிமை செய்வேன்" என்பது பக்தி நெறியில் ஆரூரர் கொண்ட பற்றைக் காட்டுகிறது. இதற்குச் சேக்கிழார் விரிவுரை செய்வதுபோல எட்டுப்பாடல்கள் பாடியுள்ளார். பசு வின் கன்றணைந்தாற்போல் ஈசனடியாரைக்கண்டால் அணைந்து பணிமொழிபேசுமியல்பினர் ; கெடாத அன்பினுல் விளக்கம் பெற்று மேலார்க்கும் மேலாகும் திறத்தினர்; அங்கணனை அடியாரை ஆராத காதலினல் பொங்கிவரும் உவகையுடன் பூசிக்கும் பொற்பினர்; அவர் புகழ்க்குப் புவனமெலாம் போத மாட்டா; சிவனையன்றி அயலறியாத அன்பினர் ; கண்ணீர் வார்தல், பேசிய வாய் தழுதழுத்தல், மயிர்சிலிர்த்தல், உடல் கம்பித்தல் முதலிய மெய்ப்பாட்டினர். நின்றாலும், இருந்தாலும்,

கிடந்தாலும், நடந்தாலும், மொன்றாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும், மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார், பொங்கி வரும் சித்தமுடன் பத்தராய்ப் போற்றுவார் என்கின்றார் சேக்கிழார்.

தென்றமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன மன்றினில் நடம்புரியும் மாபொருளையே என்று உணர்ந்து, ஒன்றிய மெய்யுணர்வோடும், உள்ளுருகிப் பாடுவாரே பரமனையே பாடுவார் என்பார் அடுத்து.

நாதாந்தத் தாரணையால் சிவத்தடைந்த சித்தத்தார், தனி மன்றுள் ஆடும் கூத்தர் அடித்தொண்டின் வழியடைந்தவர் என்றும் திருக்கயிலை வீற்றிருந்த சிவகணத்தார் திருவாரூரில் பிறந்தார்களாதலினால் திருவாரூர்ப்பிறந்தார்கள்எனப் போற்றப் படுவர் என்றும், முப்போதும் திருமேனி வழிபடுவோர் மறையவர் குலத்து மாண்புடையவர் ஆவர் என்றும், பேசி, முழுநீறு பூசிய முனிவரை ஆறு பாடல்களில் கூறிமுடிப்பர்.

இவர்களையெல்லாம் தொகையடியாராக நம்பியாரூரர் வழி பட்டார் என்பது வியப்பிற்குரியதில்லை. இறுதியாக அப்பாலும் அடிச்சார்ந்தார் என்று அமைத்தனரே அப்பகுதியே சுந்தரரின் வியத்தகு பரந்த பொதுநோக்கைக் காணத் துணைபுரிகின்றது.

“மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக்கப்பால்
முதல்வனா ரடிசார்ந்த முறைமையோரும்,
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற்கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்,
பூவேய்ந்த நெடுஞ்சடைமே லடம்புதும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச்சார்ந்தாரும்
செப்பரிய அப்பாலும் அடிச்சார்ந்தார்தாமே”

### அப்பாலுமடிச் சார்ந்தார் - பொது நோக்கு :

தமிழ்நாட்டின் எல்லை தாண்டி உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் உள்ள அடியார்களை, அவர்கள் பார்த்திருக்கும் சமயம் எதுவாயினும் அதுபற்றிச் சிறிதும் அயராது வணங்கும் திறம் அனைவருக்கும் வந்து விடுமா? அவ்வாறே தமக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த அடியார்களையும் வணங்கும் திறன் எல்லோர்க்கும் எய்துமா? உலகப் பொது நோக்குடையவர் நம்பியாரூரர் என்ற உண்மையினை உலகம் உணர்தற்கு இவ்விளக்கம் பெருஞ் சான்றாகும்.

உலகப் பெருங்கவிஞர்கள் நோக்கில் வேற்றுமைக்கு இடம் ஏது? மனிதகுலம் மட்டுமின்றி மன்னுயிர்கள் அனைத்தும் மாண் புடன் வாழவேண்டும் என்று மனமார விழைவதன்றோ அன்னார் போக்கு? அந்த நோக்கிற் சிறிதும் பிறழாதவர் நம்பியாரூரர் ஆதலின் தம்முடைய விரிந்த உள்ளத்தின் வித்தகம் தோன்ற இவ்வாறு விதந்து ஓதியுள்ளார். சைவ சமயம் உலகமெல்லா வற்றையும் ஒருமைப்படுத்தும் ஓர் உலகச் சமயக் கோட்பாட்டை உடையது. (Universalism in religion) என்பதற்கு இவ்வாறு திருத்தொண்டத்தொகை ஓர் இனியசான்றாய் அமைந்துவிட்டது என்று கூறலாம். "எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன் னடியார்க்கு இங்கே" என்றருள் புரிபவன் இறைவன் என்பது நம்பியாரூரர் கோட்பாடு. அதன் அடிநிலை விளக்கமாக இந்தப் பகுதி அமைவதைக் காணலாம்.

உலகத்தில் தோன்றியுள்ள எம்மொழிக் கவிதையாயினும் அது ஓரளவுக்கு நுண்பொருள் இயற்கோட்பாட்டிற்கு ஒத்தே வருவதைக் காணலாம். ('All great poetry is in some measure metaphysical' The Background of English literacture Herbert Grierson - 1929 - P. 15)

கவிதை என்பது, அது எம்மொழியில் தோன்றியதேயாயி னும், அறிவின் முதலாந்தரம் உடையதும் முடிநிலை சுட்டுவது மாகிய படைப்பே என்றும், மனிதனின் நெஞ்சமும் அதிற்படிந்த ஆழ்ந்த எண்ணங்களும்போல் அது அழியாத அமரத்தன்மை கொண்டது என்றும் கருதலாம். ("Poetry is the first and last of all knowledge - it is as immortal as the heart of man"- Wordsworth, Preface to lyrical ballads) நம்பி யாரூரரின் கவிதை பொதுவாக இந்நல்லியல்புகள் வாய்ந்ததே எனினும், குறிப்பாகத் திருத்தொண்டத்தொகை, இன்னும் குறிப்பாக அப்பாலும் அடிச்சார்த்தாரைப் பற்றிய குறிப்பு மனித சமுதாயத் தின் நல்லோர்க்கு அவர் எடுக்கும் மாபெரும் வழிபாடு என்று கூறலாம்.

சைவத்தின் பரந்த நோக்கை மிகச்சுருங்கிய அளவில் எடுத் துரைக்கும் பகுதியாக இக்குறிப்பை மதிப்பது தவறாகாது.

(தொடரும்)

# திருப்பள்ளி யெழுச்சி

டாக்டர். திரு. C. சீனிவாசன் M. Sc. Ph. D.,
F. B. B. S. (Lond), M. I. A. B. (Utrt).

( மலர் 34, இதழ் 3, பக்கம் 128 இன் தொடர்ச்சி )

அடுத்த இரண்டு பாக்கள் ஒரு கருத்துடையன.

அதுபழச் சுவைஎன அமுதுஎன அறிதற்கு
அரிதுஎன எளிதுஎன அமரரும் அறியார்
இது அவன் திருஉரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும்ஆறு அது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. (7)

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்துஅணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி
திருப்பெருந் துறைஉறை கோயிலுங் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்
ஆர்அமு தேபள்ளி எழுந்தரு ளாயே. (8)

இத் திருப்பாடல்களிலும் "இங்கெழுந்தருளும்" எனவும், "எழுந்தருளியபரன்" எனவும் கூறப்படுதலின் இவை இரண்டும் ஒரு தொடர் ஆகும். எங்களை ஆண்டு கொண்டு அருள் புரிந்து, இம்மண்ணுலகில் அம்மையொடு எழுந்தருளும் மதுகை உடைய திருப்பெருந்துறை மன்னா; எம்மைப் பணிகொள்ளும் ஆறு எது? என்று வினவுகின்றார். அது பழச் சுவை எனவும் அமுது எனவும் மூவர் முதலான யாவர்க்கும் அரிது எனவும், எம்போன்றவர்க்கு எளிது எனவும், அமரரும் அறியமாட்டார் எனவும் கூறுகின்றார். அது என்பதுயாது? அவன் திருஉருவா?

அங்ஙனமாயின் அது பழச்சுவை யாகவோ, அரிதாகவோ, எளிதாகவோ தெரியாமல் இருக்கலாம். ஆனால் அது அமுது என்றால் எப்படி அறியாமல் இருக்கமுடியும்? அமுதம் அருந்தி யன்றோ அமரர் ஆயினர்.

இன் இசை வீணையர் முதலான நான்கு, ஐந்து ஆறும் பாடல்களில், "ஆண்டுகொண்டு இன்னருள் புரியும், எம்மை யாண்டு அருள்புரியும், என நிகழ்காலத்தால் ஆண்டவன் அருள் புரிவதைக் கூறுதலின் இறையருள் மாமாயை திரோதானம் அகன்று பக்குவப்பட்ட அடியவர்க்குச் சுரப்பதாயிற்று. இங்ஙனம் காயத்துள் அமுது ஊற, ஊற நிறைந்துவரும் அருளமுதம் எற்புத்துளைதோறும் நிரம்புகின்றது. ஆகவே அது என்பது அடியார்க்கு உடலெலாம் ஊற்றெடுத்து ஓடி நிரம்பும், 'அற்புத மான அமுததாரை' யாக இருத்தல் கூடும். பழ அடியார் குடில் (குரம்பை) தொறும் அருள் அமுதமாக எழுந்தருளுவதும் – அதுவே இதுவாக – அவனது திருஉருவாகும்; இவனே அவன்; அன்று அந்தணனாய் ஆட்கொண்ட அவன் ஆவன். எனவே "இங்கெழுந்தருளும் திருப்பெருந்துறை மன்னா; எங்களுக்கு இடும் பணி யாது? அது கேட்க இங்குக் காத்து நிற்கின்றோம். பள்ளி எழுந்து பணிகொண்டு அருள்வாயாக" என்கின்றார்.

மூவராலும் அறியப்படாதவனை யாரால் தான் அறியமுடியும். வாழையடி வாழையென வந்ததிருக்கூட்டத்துப் பழ அடியார் களின் குடில்தொறும்-உடலெலாம் அருளமுதமாக எழுந்தருளும் பரனே; செந்தழல் ஒத்த அருட் பெருந்தீயாகிய திருமேனி காட்டினாய்; திருப்பெருந்துறையிலே நீ உறையும் செம்பொற் கோயிலும் காட்டினாய்; வான் பழித்து மண் புகுந்து, மானுடம் விழைந்து அந்தணன் ஆகித் திரு ஓலக்கம் காட்டி இங்குவந்து ஆட்கொண்டு அருளினாய்; எம்பெருமானே! பள்ளி எழுந்தருள் வாய் என்கிறார். முந்தும், நடுவும், முடிவும் ஆகியவன் மூவரும் அறிய முடியாத முழு முதல் என்றார் குயிற்பத்துள்ளும். இதனுள் முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய் என்கிறார்; ஊழி தோறு ஊழிகட்கும் முந்திய முதல்வன் ஆதலின்.

இப்பதிகத்தின் ஒன்பது திருப்பாடல்களில் திருப்பெருந் துறை உறை சிவபெருமானே என விளித்துப் பாடும் அடிகள் இவ்வெட்டாந் திருப்பாடலில் "திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி"னான் என்றமையின், திருப்பெருந்துறையா வது யாது? மேலும் இப்பதிகம் திருப்பெருந்துறையில் அருளப் பெற்றது என்ப. அங்ஙனமாயின் அங்குக்கோயில் கொண்டுள்ள

இறைவன், தான் உறையும் கோயிலைக் காட்டுவானேன்? திருவாசகத்தில் தில்லைக்கு அடுத்தபடி திருப்பெருந்துறைப் பதிகங்களே மிகுந்துள்ளன.

" வேயதோள் உமைபங்கன் எங்கள் திருப்பெருந் துறை
[ மேவினன்
காயத்துள் அமுது ஊறஊறநீ கண்டுகொள் என்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னித் திகழுமே "

என்பதை உற்று நோக்கினல் திருப்பெருந்துறைக் கோயில்தானும் மணிவாசக அடிகளது சென்னிமன்னிச் சுடருவதாக இருக்குமோ! செந்தழல் புரை திருமேனியுங் காட்டினன் என்றபடியால் தமது அரும்பெரும் சோதியுருவை அடிகளது சென்னி மிசைக்காட்டியருளினன் என்பதுபொருத்தமாகத்தோன்றுகிறது. சென்னித்தலத்தே ' ஆயிரங் கதிரவன்போல் காந்திகாணும் " என்று சித்தர் பெருமக்கள் இறைவனது தழல் உருக் காட்சியைப் பேசுவதும் சிந்திக்கற்பாலது. ஆகவே இவ்விரு பாடல்களும் இறைவன் எழுந்தருளிய செய்தியைக் கூறுமாறு காணலாம்.

அடுத்த இருபாக்களும் ஒரு கருத்துடையன.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண் திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடல்அமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குஉயி ராளுய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. (9)

புவனியில் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்கிநின் ருேம்அவ மேஇந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறுஎன்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்துஎமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. (10)

இவ்விரண்டு பாக்களில் இறைவன் " மண்ணகத் தேவந்து வாழச்செய் வதும் ", " அவனியில் புகுந்துஎமை ஆட்கொள்

வதும்" கூறப்படுகின்றன. இவை, இம்மண்ணுலகம் சிவபெருமான் ஆன்மாக்களை உய்விக்கும் களமாவதைச் சிறப்பித்துக் கூறும். விண்ணகத் தேவரெல்லாம் அணுகமுடியாத மேலான பெருமானே! மண்ணகத்தேவந்து எம்மை வாழச்செய்தவனே! எமது கண்ணிடத்தே நின்று களிப்பைத் தரும்படியான தேனே! எம்பெருமானே! ஆர் அமுதே! அடியேங்கள் நின்வழியடியோம்; பள்ளி எழுந்தருள்வாய்" என்கின்ருர்.

"பெருந்துறையில் உறை பெம்மான் மனத்தான் கண்ணின் அகத்தான்" என்பார் உயிருண்ணிப்பத்துள்ளும். விண்ணகத்தும், மண்ணகத்தும், மனத்தகத்தும், உலகுக்கு உயிராய் நிறைந்தோங்கும் நம்பெருமான் அடிகளின் கண்ணகத்தும்; மனத்தகத்தும் நிறைந்து நின்று களிப்பைத் தருகின்ருன்.

"எந்தனுள் ஏக செஞ்சுடராகி என்கணில் ஆடுதழல் வேணி" எனும் அருணகிரி வாக்கையும், "கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால் உள்ளகத்தே நின்ற ஒளி" என்ற ஔவைக் கூறலையுங்காண்க. "கண்ணால் யானும் கண்டேன் காண்க" என்றமையின் காட்சிப் புலனுகிய இறைவன் கண்களினிடத்தே ஊறி ஒளிர்ந்த களிப்பைத் தருவானுயினன். சிவநிலை அனுபவங்கள் கண்ணிடத்தே காரியப்படும் என்பர் அவனடி அடைந்த அருளாளர்.

இத்திருப்பாடலில் அடிகள் இறைவனை,

1. விழுப்பொருளே
2. வாழச்செய்தானே
3. திருப்பெருந்துறையாய்
4. கண்ணகத்தேநின்றுகளிதரு [தேனே
5. கடலமுதே
6. கரும்பே
7. எண்ணகத்தாய்
8. உலகுக்கு உயிர் ஆனும்
9. எம்பெருமான்

என ஒன்பதுதரம் விளித்துரைக்கின்ருர். தமது அழிதரும் யாக்கையை ஒழியச்செய்த ஒண்பொருள் அற்புதமான அமுததாரையை ஏற்புத்துளைதொறும் ஏற்றி, அளிதரும் யாக்கையாகச் செய்தானுகலின் அடிகள் சிவபெருமானை நவநிலை நின்று ஏத்துவாராயினர்.

(தொடரும்)

# நந்திக் கதம்பம்

"நஜன்"

(மலர் 34, இதழ் 2, பக்கம் 60 இன் தொடர்ச்சி)

## குருநாதன் நந்தி

குருமூலமே ஞானம் பெற முடியும். பெறவும் வேண்டும். இறைவன் குருவாகவந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

> "அங்கணன் கைலைகாக்கும் அகம்படித் தொழின்மைபூண்டு
> நங்குரு மரபுக்கெல்லாம் முதல்குரு நாதன் ஆகி"

என்று அவரைப்பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெருமானிடமிருந்து சிவஞானபோதத்தின் உண்மைப்பொருளை அருளுபதேசம் பெற்றவர்கள் சனற்குமாரர், சத்தியஞானதரிசினி, பரஞ்சோதி ஆவர். ஆசாரியமுறையில் நமக்கு அருள்புரிபவர் நந்திதேவரே. இவர்வழி வந்தவரே - மெய்கண்ட சந்தானத்தின் குருபரம்பரை பரஞ்சோதியாரே, திருவெண்ணெய் நல்லூரில் அவதாரம் செய்த மெய்கண்டாருக்கு உபதேசம் செய்தவர். குருவின் அருள்பெற்றுமெய்கண்டார்'சிவஞானபோதம்' இயற்றினர். இந்த மெய்கண்ட சித்தாந்த குருபரம்பரையில் பன்னிரண்டாமவராக வந்தவர் தருமையாதீன குருஞானசம்பந்த தேசிகராவர்.

சிவபெருமானே பரமாசாரியன். தன் ஆசாரியத்தன்மையை பலரிடத்தில் வைத்து உலகில் ஞான ஒளியைப் பரப்புகிருன் என்பதை,

> "திருமால் இந்திரன் பிரமன் உபமனியன் தபனன் நந்தி
> செவ்வேளாதித் தருமமுது ஞரவருக்கும் தனதருளால்
> [ஆசிரியத் தலைமை நல்கி

என்று சிவதத்துவ விவேகச் செய்யுள் குறிப்பிடுகிறது. இதனுள் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்கள் எழுவரில் நந்திகேசுவரர் ஒருவர்.

ஸ்காந்தத்தில் அம்பிகை, கணபதி, சுப்பிரமணியர், நந்தி கேசுவரர், பிரம்மா, விஷ்ணு, இந்திராதியர்கள் முதலியவர் களுக்குக் கயிலேயில் நான்கு திசையிலும் நான்கு குரு ரூபங்கள் கொண்டு உபதேசித்தார் என்றும், பின்பு அவர்கள் வழியில் வந்த குருமார்களே பூமியில் அவதரித்து குருபரம்பரையை ஸ்தாபித்தார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

## அவதார விளக்கம்

நந்திகேசுவரர் இப்பூவுலகில் ஜனித்துப் பேறுபெற்றதைப் பற்றி அறிய, பஞ்சநத க்ஷேத்திரம் எனப்படும் திருவையாறு தல புராணத்தைப்புரட்டவேண்டும். திருவையாற்றில் சிலாதமுனிவர் என்கிற மகாதபஸ்வி ஸ்ரீ பஞ்சாக்ஷரசித்தியின் பொருட்டு வந்து தங்கி தூர்வாச மகரிஷியின் ஆக்ஞையின்படி கல்பொடிகளை ஆகாரமாகக்கொண்டு ஸ்ரீ ஜப்பேசுவரர் சந்நிதியில் அமர்ந்து ஜபம் செய்து மந்திரசித்தியைப் பெற்ருர். கற்களை ஆகாரமாகக் கொண்டதால் இவருக்குச் சிலாதர் என்ற பெயர் ஏற்பட்டது. இவர் வசிஷ்டருடைய தங்கையாகிய சாருலக்ஷணையை மணந்து ஒரு புத்திரனைப் பெற்ருர். இப்புத்திரன் கிடைத்த வரலாறு பின் வருமாறு :-

மகப்பேறு இல்லாமல் வருத்தமுற்ற சிலாத முனிவர் ஐயாறப் பனைப்பூசித்துவழிபட்டுவந்தார். புத்திரகாமேஷ்டியாகம் செய்யும் படிக்கும், அப்படி யாகம் செய்யும்போது பூமியிலிருந்து புத்திரன் கிடைப்பான் என்றும் அசரீரிவாக்கு கூறியது. அப்படியே பூமியை உழும்போது ஒரு பெட்டி கிடைத்தது. அதைச் சிலாதர் திறந்துபார்த்தபோது நான்கு தோள்கள், மூன்று கண்கள் சந்திரனை அணிந்த முடி இவற்றுடன்கூடிய ஒரு மூர்த்தியைக்கண்டார். "பெட்டியை மூடித்திற" என்று அசரீரி கேட்டது. அவ்வண்ணமே மூடித்திறந்ததும் ஒரு அழகான குழந்தை அதில் காணப் பட்டது. பெற்ரோர்கள் இவருக்கு சைலாதர் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார்கள்.

இவர் இறைவனை நோக்கிக் கடுமையாகத் தவம்செய்ததால் இவர் உடம்பு பாதிக்கப்பட்டது. கங்கைநீர், மேகநீர், பிரமன் கமண்டலநீர், அம்மையின் முலைப்பால், இடபநந்தியின் வாய் நுரைநீர் என்கிற ஐந்து நீரினுல் குளிப்பாட்டப்படவே சைலாதர் உடல் குறைகள் அகன்றன.

சைலாதர் ஐயாறப்பனின் உபதேசம் பெற்று கயிலேயில் சிவ கணங்களுக்குத் தலைவர் பதவியையும், முதல் திருவாயிலில்

இருந்து காக்கும் உரிமையையும், சைவாசாரியர்களில் முதல் குருவாகும் தன்மையையும் பெற்ருர். இவர் விரும்பியபடியே சிவசந்நிதானத்தினின்றும் என்றும் விலகாத வரம் அருளி சிவ கணங்களுக்குத் தலைமை தந்து பட்டாபிஷேகம் செய்யப்பட்டார். இவருடைய பட்டாபிஷேகத்திற்காகவே பஞ்சநதிகளும் வர வழைக்கப்பட்டன. அப்போதுதான் பரமேசுவர சாருப்யத் தையும், ரிஷப முகத்தையும், நந்திகேசுவரர் என்ற தீக்ஷாநாமத் தையும், இரத்தினப்பிரம்பையும் இறைவன் இவருக்கு அருளினர்.

## நந்திதேவரின் திருமணம்

நந்திகேசுவரர் வசிஷ்ட மகரிஷியின் பௌத்திரியும் வியாக்ர பாத முனிவரின் புத்திரியும் உபமன்யன் என்பவரது சகோதரியு மான 'சுயம்பிரபை' என்பவளை மணந்தார். திருமணம் திரு மழபாடி என்ற தலத்தில் நடைபெற்றதென்றும், இறைவனே இதை முன்னின்று நடத்திவைத்ததாகவும் புராணங்கள் கூறு கின்றன. (திருமழபாடி விருத்தாசலம் - திருச்சி பாதையில் புள்ளம்பாடி ரயில் நிலையத்திற்குக் கிழக்கே பன்னிரண்டுமைலில் கொள்ளிடக்கரையில் உள்ளது.)

இத்தலத்தில் இறைவன் எதிரில் நந்திகேசுவரர் நின்ற கோலத்தில் அஞ்சலி செய்தவண்ணம் இருக்கிருர். இந்த நந்தி தேவரின் திருமண விழா பங்குனி மாதத்தில் நடைபெறுகிறது. திருவையாற்றிலிருந்து ஐயாறப்பனும் அறம்வளர்த்தநாயகியும் மணமகனை அதிகார நந்தியுடன் மணப்பெண் வீடான திரு மழபாடிக்கு எழுந்தருளுகிருர்கள். இந்த மழபாடி மணவிழாவைத் தரிசனம் செய்யவே ஏராளமானகூட்டம் இவ்விழாவின்போது கூடுகிறது.

## தத்துவ விளக்கம்

நந்திகேசுவரரது சரித்திரம்தான் திருவையாற்றுத்தலத்தின் சிறப்பாகும். தத்துவ ஆராய்ச்சிக்கும் ஜீவாதாரமான விஷயம் அதுவே. இத்தலத்தில் சுசரிதன் என்பவன் வசிஷ்ட முனிவரின் திருவருளால் பரமேசுவரனது கட்டளையின்படி மரணபய (யமபாச)த்தினின்றும் நீங்கி நித்யத்துவத்தை அடைந்ததாகப் புராணம் கூறுகிறது. யமனை அடக்கிய நந்திகேசுவரரின் உருவமே சிவாலயத்திற்குத் தெற்கேயுள்ள ஆட்கொண்டாரது திருவுருவமாகும்.

## பஞ்சநதம்

புருவமத்தி ஆறு ஆதாரங்களில் ஆக்ஞாசக்கிர ஸ்தானமா கும். இது மானசிகக்ஷேத்திரம். இந்தஸ்தானத்தில் ஐந்து நதிகள் ஒன்றுசேருகின்றன.

1. கங்கை — சகஸ்ரதளமாகும். பிரும்மரந்திரஸ்தானத்திலிருந்து கீழ்நோக்கிப் பெருகும் சைதன்ய அமிருததாரை.

2. சூரியபுஷ்கரிணி — பிங்களை.

3. சந்த்ராம்ருதநதி — இடை.

4. கௌரிமுலைப்பாலறு—கௌரி என்ருல் வாக்கின் மண்டலம். இது மத்திமை. இது ஆறு ஆதாரங்களில் ஒன்ருன விசுத்தி சக்கிரத்திலுள்ளது. இதினின்றும் மேல்நோக்கி எழும் ஆத்மகோசர விருத்திக்குப் பாலாறு என்று பெயர்.

5. ரிஷபநதி — நந்தி என்பது பரிசுத்த ஜிவன். நந்தியின் வாய் சுத்தாந்தக்கரணம் எனப்படும். அந்தக் கரணவிருத்தியே ரிஷபநதியாகும். இந்த ஐந்தும் ஆக்ஞாசக்கிரத்தில் ஒன்று சேருகின்றன.

## நந்தியின் திருமணத் தத்துவம்

பங்குனி பன்னிரண்டாவதுமாதம். விவேகம், வைராக்கியம், சமம், தமம், உப்ரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம், முமுக்ஷுத்துவம், சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்னும் பன்னிரண்டு சாதனங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதத்திற்கு ஏற்பட்டதாகும். பங்குனி மாதத்தில் நிதித்தியாசனம் என்னும் சிறந்த சாதனம் ஏற்படுகிறது. சுக்கில பக்ஷம் ஸஜாதீயமாகும். ஆத்ம கோசர விருத்திகள் பிரவகித்து வளர்ச்சியுறும் நிலை.

பரமேசுவரனே திருமணத்தை நடத்திவைத்த தத்துவம். ஈசுவரானுக்கிரகமின்றி யாருக்கும் ஆத்மாபரோக்ஷ ஞானம் உண்டாகாது. இறைவனது அருளினல்தான் "அவனே நான்" என்னும் அத்வைதநிலையைப்பெறமுடியும் என்பதைக்குறிக்கிறது.

பரமசிவநந்தி - நிதித்தியாசனம். நந்திகேசுவரர் சதா சோகம் பாவனையோடு விளங்குபவர். சிவசந்நிதியாகும் - நிதித்தியாசனத்தினின்றும் எப்பொழுதும் விலகாதவர் என்றுபொருள். மற்றும் நந்தியெம்பெருமான் சதா கைலாசத்தையே காவல் காத்துக்கொண்டிருப்பவர். கைலாசம் என்ருல் ஒரு சிறிதும் துக்கம் கலக்காத ஆனந்தமாக விளங்கும் ஸ்தானம் என்று பொருள். அது இந்த சரீரத்தில் பிரம்மரந்திரஸ்தானமே யாகும். அதுதான் புருவமத்தியிலுள்ள ஆக்ஞாசக்கிரம். இந்த ஸ்தானத்தை குளபதம், கந்தழி என்று சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

( தொடரும் )

# "தெய்வம் என்பதோர் சித்தம்" *

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,**

( மலர் 34. இதழ் 3. பக்கம் 112 - இன் தொடர்ச்சி )

இந்நாளில் மேலைநாட்டு அறிஞர்களும் மனிதவாழ்க்கைக்குத் தெய்வக் கொள்கையில் இன்றியமையாமையினை உணர்ந்து வற்புறுத்தி வருகின்றனர். 1 இயற்கையமைப்புக் காரணம், 2 சமய வாழ்வியல் அனுபவக்காரணம், 3 ஒழுக்க நெறிக்காரணம், 4 குறிக்கோள்வகைக் காரணம், 5 புறத்தோற்றவுண்மைக் காரணம், 6 நம்பிக்கையுரிமைக் காரணம் முதலிய பலவற்றைக் காட்டி, மேலைநாட்டு அறிஞர்கள் கடவுளுண்மையினை நிறுவுவர். ‡

**வாழ்க்கைச் சிக்கல்கள்:**

ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையிலும், சில பல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இன்றியமையாமைகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய உணர்வையும் கடவுள் நம்பிக்கையையும் எழுப்பியே விடுகின்றன. முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பர் ஆகியே ஒழிகின்றனர். நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்து மறைந்து போதலை நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்துபோகின்றன.

---

‡ 1 The Teleogical and Evolutionary argument.

2 The Religious Experience argument.

3 The Moral Argument.

4 The Idealistic argument.

5 The pragmatic argument.

6 The Realistic argument.

7 The Right to Believe argument.

பெருத்த துன்பங்களும், நோய்களும், தொல்லைகளும் நேருங் காலெல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணர வேண்டியவன் ஆகின்றான். எல்லோரையும் அடக்கியாண்டு, யாவும் தம்மாலேயே நடப்பனவாகக் கருதி தருக்கிக் களித்து நிற்போரும், பின்னொரு ஞான்று 'அந்தோ வினையே' என்று அழுங்கித் துன்பம் உழக்கக் காண்கின்றோம். தன்னுடைய அறிவும் முயற்சியும் ஆற்றலும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவேஎன்று உணர்கின்றபோது வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேராற்றலும் பேரின்பமும் உடைய ஒரு முழுமுதற் பெரும் பொருளின் துணையைத் தேடி அடைய, மனிதன் பெரிதும் ஆவலுற்று அலைகின்றான்.

## உலகியல் நிகழ்ச்சிகள்:

பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து காணுந்தோறும், அவற்றிற் கெல்லாம் மூல முதற்காரணமாக இருந்து இயங்கிவரும் ஒப்புயர்வற்ற முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை யாவரும் இனிது உடன்படவே வேண்டியுள்ளது. நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக முடிகின்றது. எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோரும், சின்னாளில் அவற்றினை வெறுத்தொதுக்கி இணையதென்றுகூற இயலாத வேறேதோ ஒரு பேரின்பத்தினை விழைந்து நின்று, உள்ளம் அமைதியிழப்ப ஏக்கற்று அலமந்துழல்கின்றனர். நமக்குத் துணை என நம்மால் நம்பப் பெறுபவர்கள் பலரும், நம்மைக் கைவிட நேரும் நிலையில், 'நான் இந்த எட்டாம் ஹென்றிக்கு ஊழியஞ் செய்ததைவிட இறைவனுக்கு ஊழியஞ் செய்திருப்பின், அப்பெருமான் என்னை இத்தள்ளாத வயதில் இங்ஙனம் கைவிட்டிருக்கமாட்டான்' 2 எனக் கார்டினல் உல்சி என்பார் கதறிப் புலம்பியது போல, இறைவனின் துணையை எதிர்நோக்கியே நாமும் வருந்திக் கதறி அலறும் நிலையை அடைகின்றோம். இனைய செய்திகள் பலவும் கருதுவார்க்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதல் திண்ணம்.

## வியத்தகு அமைப்பு:

'நமது மனிதவுடம்பில் 600 தசைநார்கள், 1000 மைல் நீளமுள்ள இரத்தக் குழாய்கள், 550 இரத்த நாளங்கள், 16 சதுர

---

2 "Had I but served god, instead of Henry the VIII, He would not have deserted me' Like this in my old age"

— Cardinal Wolsey.

அடிப் பரப்புடைய தோல், 15 லட்சம் வியர்வைக் கோளங்கள், மூச்சுப்பையில் தேன்கூடுபோன்ற 70 கோடி கண்ணறைகள், 3x12 நரம்புக் கண்ணறைகள், 300 லட்சம் வெள்ளை யணுக்கள், 10x10 சிவப்பணுக்கள், 2½ லட்சம் தலை மயிர்கள் ஆகியவை உள்ளன. 7 ஆண்டுகளில் நமது இதயம் 250 கோடிதடவைகள் துடிக்கின்றது. 5,00,000 டன் இரத்தத்தை வெளியேற்றி உடம்பித் பரவச்செய்கின்றது. நாள்தோறும் 36 அவுன்ஸ் அளவு உமிழ்நீர் சுரந்து விழுங்கப்படுகின்றது. 120 முதல் 240 அவுன்ஸ் வரை வயிற்றிற் செறிநீர் ஊரி, உணவைச் செறிப்பித்துக் கிருமிகளைக் கொல்லுகின்றது "3. இதுபோன்ற செய்திகளை அறிந்து எண்ணுந்தோறும் நாம் பெரிதும் இறும்பூது எய்துகின்றேம் அல்லமோ? நம் உடலாகிய பிண்டத்தின்கண் நிகழும் இத்தகைய நிகழ்ச்சிகளைப் போலவே, அண்டத்தின் கண்ணும் எத்துணையோ பலப்பல வியத்தகு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் ஒரு சிறிதேனும் உன்னித் துணரவல்லார், கடவுள் உணர்ச்சியுடையவராகாமல் இருத்தல் ஒல்லுமோ ?

## சார்லஸ் எலியட் :

சர் சார்லஸ் எலியட் என்னும் பேரறிஞர், "யாராவது கடவுள் இல்லை என்று கூறினல், இறந்தொழியக்கூடிய, பரமாணுவினும் மிகச் சிறிய, ஓர் அற்ப மனிதன், இவ்வுலகில் ஓர் அணுத் துணைப் பரப்பில், ஒரு நொடிநேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிறைந்து எல்லையின்றி விரிந்து விளங்கும் பேரண்டத் தொகுதிகளையெல்லாம் நன்கினிது கண்டுணர்ந்து வைத்துங்கூட, மெய்ப்பிக்கப்பட முடியாத ஒரு கருத்தை, இத்துணை உறுதியாகக் கொள்ளுதல்

---

3 " There are in the human body 600 muscles 1000 miles of blood vessels, 550 arteries, 16 square feet of skin, 15,00,000 sweat glands, 700 million cells in honeycomb fashion in the lungs, 3x10 12 nerve cells, 30 million white corpuscles and 2,50,000 hairs on the head. In 70 years, the heart beats 2500 million times and lifts 5,00,000 tons of blood. 3pints of saliva are swallowed daily and the stomach generates 5 to 10 quarts of gastric Juice everyday which digests the food and destroy the germs."

— Louis Leguen

எவ்வாறு இயலும்? என்றுதான் நான் வினவுகிற்பேன்" 4 என்று குறிப்பிடுகின்றார்.

சிசரோ :

இங்ஙனமே, இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோம நாட்டில் உயிர்வாழ்ந்திருந்த சிசரோ என்னும் பெருநாவலர், 'இயற்கைப் பொருள்களில் மனிதன் அறிவு - ஆராய்ச்சி ஆற்றல் என்பனவற்றால் செய்து நிறைவேற்ற இயலாத ஏதோ ஒன்று அமைந்து கிடக்கின்றது. அது மனிதனை விடச் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும். அது கடவுளைத் தவிர வேறு யாதாக இருத்தல் கூடும்' 5 என அறைகூவி அறிவுறுத்தியிருப்பதும், ஈண்டு நாம் உணர்தற்குரியது.

பேராசிரியர் யுங் :

உலகப் புகழ்பெற்ற உளநூல் அறிஞர் ஆகிய பேராசிரியர் யுங் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். 'கடந்த முப்பது ஆண்டுகளாக உலக நாகரிக நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் பலரும் என்பால் கலந்து ஆய்வுரை கேட்டுள்ளனர். என்னுடைய பிணியாளர்கள் அனைவருள்ளும், வாழ்க்கையில் இரண்டாம் பகுதியில்-அதாவது, முப்பத்தைந்து வயதுக்குமேல் தம் இன்னல்கள் தீருவதற்கு உரிய கடைசி வழியாகத் தமது வாழ்க்கையிற் சமயவுணர்வு (தெய்வக் கொள்கை) கைவரப் பெறுதலைக் கொள்ளாதவர்கள், ஒருவராவது இல்லை. அவர்களில் ஒவ்வொருவரும் நோயுற்றதற்குக்காரணம், உயிர்ப்புடைய ஒவ்வொரு மதமும் அவ்வக்காலத்தில் தன்னைப் பின்பற்றும் மக்களுக்குத் தருகின்ற மனநிறைவுணர்ச்சியை, அவர்கள் பெறுமல் இழந்து விட்டமையேயாகும். அவர்களில் ஒருவராவது

---

4 If ay one says 'There is no God' I can only ask how a spech of a mortal living for a moment on an atomn of an earth in plain sight of on infinite universe, full of beauty, wonder and design, can confidently hold so improbable.

—Sir Chorles Eliot.

5 "There is some thing in the nature of things, which the mind of man, which reason, which human power cannot effect, and cetainly that which produces this must be better than man. What this can be but God."

— Cicero.

மீண்டும் சமயவுணர்வு கைவரப்பெருமல், உண்மையில் தம்முடைய பிணி தீரப்பெற்றிலர்’ 6, இங்ஙனம் பேராசிரியர் யுங் அவர்கள் கூறியது, ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான்,

> “ தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது ”

என இன்றைக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் இயம்பியருளிய பொய்யாமொழியின் எதிரொலி போலவே காணப்படுகின்றது அன்றோ?

---

6 ‘During the past thirty years, people from all the civilised countries of the earth have consulted me Among all my patients in the second half of life that is to say over 35years - there has not been one whose problem in the last resort was not that of a ‘finding a religious outlook on life’. It is safe to say that every one of them fell ill, because he had lost that which the living religions of every age have given to their followers, and none of them has been really sealed who did not regain his religious out look.’

— Prob. C. G Jung.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

The shrine is maintained very well. The premises are kept elean. The devotees are re eived with kindness and warmth, I am returning with a heart full of peace and tranquility.

16—2—75.

Sd. S. Suriyamoorthy.
High Court Judge (designate)

# மகாத்மா காந்திஜியின் —
# — மணிமொழிகள்

மதத்துக்கும் அரசியலுக்கும் எவ்விதசம்பந்தமும் கிடையாது என்று கூறுவோருக்கு மதத்தின் பொருள் விளங்கவில்லை என்று சிறிதும் தயக்கமின்றி, ஆனால் மிகுந்த பணிவுடன் நான் சொல்வேன்.

பாவங்கள் எல்லாம் ரகசியமாகச் செய்யப்படுகின்றன. நம்முடைய எண்ணங்களைக்கூடக் கடவுள் அறிவார் என்பதை நாம் உணர்ந்துவிட்டால் அந்த விநாடி முதல் நமக்கு விடுதலைதான்.

வெற்றியோ தோல்வியோ நம் கையில் இல்லை. நம் கடமையை நன்கு செய்தால் போதும். முயல்வதுதான் நம பொறுப்பு. இறுதியில் ஆண்டவன் சித்தப்படியே நடக்கும்.

நான் நம்பிக்கை உள்ளவன். கடவுளே கதி என்று இருப்பவன் நான். ஒரு காலடி எடுத்துவைத்தாலே எனக்குப் போதுமானது. தகுந்தநேரம் வரும்போது அடுத்த காலடியையும் அவர் துலக்கிக் காட்டுவார்.

நாம் எல்லாரும் ஓரே கடவுளின் மைந்தர்கள். ஓரே தெய்விகத்தைக் கொண்டவர்கள்.

புராதனகாலங்களில்வாழ்ந்த தீர்க்கதரிசிகளிடமும் அவதார புருஷர்களிடமும் நம்பிக்கைகொள்வது வீணான மூட நம்பிக்கை ஆகாது.

சில விஷயங்களில் பகுத்தறிவு நமக்கு அதிகமான பலனைத் தராது. அவற்றை நாம் நம்பித்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். பகுத்தறிவைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு நம்முள் இருக்கும் அந்த சக்திக்குப் பெரிய மதிப்பு கொடுக்கவேண்டும்.

உண்மையில் நம்முடைய செயல் ஒவ்வொன்றிலும் மதம் இடம்பெற வேண்டும்.

ஒரே இலக்கில் வந்துசேர்கின்ற பல்வேறு சாலைகளே மதங்கள்.

கடவுளிடம் நம்பிக்கை என்பதுதான் எல்லா மதங்களுக்கும் கடைக்கால். (அடிப்படை).

ஒரு மனிதனை இன்னொருவனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்துவைப்பதுதான் அவற்றின் நோக்கம்.

ஹிந்து மதம் தனித்து ஒதுங்கிய சமயம் அன்று. உலகின் எல்லா தீர்க்கதரிசியும் வணங்குவதற்கு அதில் இடம் இருக்கிறது. மற்றவர்களைத் தன்பால் இழுத்துக்கொள்ள முயலும் மதம் அன்று அது. எத்தனையோ பழங்குடிகளை அது தன்னுடன் சேர்த்துக் கொண்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால் பரிணாம ரீதியில் கட்புலனாகாத முறையில்தான் அது இவ்வாறு கிரகித்துக் கொண்டது. ஒவ்வொருவரும் தம்முடைய மதம் அல்லது தர்க்கத்தின்படி கடவுளை வணங்குமாறு இந்து மதம் கூறுகிறது. இவ்விதம் அது மற்ற எல்லா மதங்களுடனும் சமாதானமாக வாழ்கிறது.

அறநெறி என்ற ஆதாரத்தை இழந்துவிட்டால் நாம் மத அபிமானிகளாக இருக்கமுடியாது.

விக்கிரக வழிபாட்டுக்கு ஆதாரமான உணர்ச்சியை நான் போற்றுகிறேன். மனித இனத்தை உயர்த்துவதில் இந்த உணர்ச்சிக்கு முக்கிய பங்குண்டு. நம்முடைய நாட்டைப் பவித்திரப்படுத்துகின்ற ஆயிரக்கணக்கான புனிதக் கோவில்களை என் உயிரைக்கொடுத்துப் பாதுகாப்பதற்கான ஆற்றல் எனக்கு இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

ஒரு சிறு கல் அல்லது தங்கப் பிரதிமையில் கடவுள் இருப்பதாக எண்ணுவது கண்கூடான ஸ்தூலமான வழிபாட்டு முறையாகும்.

கோவில்கள் இருப்பது பாரம் என்றோ, மூடநம்பிக்கை என்றோ நான் கருதவில்லை. ஏதாவது ஒருவிதப் பொது வழிபாடும், பொது வழிபாட்டுத் தலமும் இருப்பது மனிதர்களுக்கு அவசியம் என்று தோன்றுகிறது.

மதத்தின் ஆன்மாவும் ஆசாரமும் பிரார்த்தனைதான் என்று நான் நம்புகிறேன். ஆகவே பிரார்த்தனைதான் மனித வாழ்வின் கருப்பொருளாக இருக்கவேண்டும். ஏனெனில் மதம் இல்லாமல் எந்த மனிதனாலும் வாழ முடியாது. சில மனிதர்கள் தங்கள் பகுத்தறிவின் ஆணவம் காரணமாக மதத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தமே கிடையாது என்று கூறுகின்றனர். ஆனால் இவ்வாறு சொல்வது நாசி இல்லாமலே சுவாசிப்பதாக ஒருவன் கூறுவதற்கு ஒப்பானது.

பிரார்த்தனை புரிபவன் தன்மனத்துள் சாந்தி பெறுவதுடன், உலக முழுவதுடனும் சமாதானமாக இருப்பான். நெஞ்சத்தில்

பிரார்த்தனை இல்லாமல் உலகவிவகாரங்களில் ஈடுபடும் மனிதன், தான் அவதிப்படுவதுடன் உலகையும் துன்பத்திற்கு உள்ளாக்குவான். ஆகவே பிரார்த்தனை, மரணத்திற்குப் பின்னர் மனிதனுக்கு உதவுவது மாத்திரமின்றி இவ்வுலக வாழ்விலும் அளப்பரிய நன்மையை அளிக்கிறது. பிரார்த்தனை ஒன்றுதான் நம்முடைய அன்றாட அலுவல்களுக்கு ஒழுங்கையும் சாந்தியையும் விசிராந்தியையும் கொடுக்கவல்லது.

ஆண்டவனின் பிரசன்னத்தை இருபத்துநான்கு மணி நேரமும் உணருவதற்கு ஒருவர் சாதகம் செய்துகொண்டால், அவருக்குத் தனியான பிரார்த்தனை நேரம் எதுவும் தேவையில்லை. ஆனால் பெரும்பாலான மனிதர்களுக்கு இது சாத்தியமல்ல. அற்பமான அன்றாட உலக வாழ்வில் அவர் மூழ்கிக் கிடக்கின்றனர். தினந்தோறும் ஒரு சில நிமிஷங்களாவது புற உலகிலிருந்து தங்கள் மனத்தை உள்ளே இழுத்துக்கொள்ள அவர்கள் பழகிக்கொண்டால் அதுவே அளவற்ற பயனளிக்க வல்லது, அவர்கள் மௌனமாகக் கடவுளைத் தியானித்தால் பரபரப்புக்களிடையே சலனமற்ற சாந்தியை அனுபவிக்கவும், சினத்தை அடக்கவும், பொறுமையை வளர்த்துக்கொள்ளவும் அது உதவும்.

நன்றி. — அருள், 15—6—74.

---

பெரியநாயக்கன்பாளையத்தில்

## திருத்தொண்டர் திருவிழா

பெரியநாயக்கன்பாளையம், தருமையாதீனம்ஸ்ரீலஸ்ரீகுருஞான சம்பந்தர் இறைபணிமன்றச்சார்பில் 28—2—75 வெள்ளிக்கிழமை இரவு 7 மணி அளவில் அருள்மிகு மாரியம்மன் கோயிலில் திருத்தொண்டர் திருவிழா சிறப்பாகநிகழ்ந்தது. அருள்மிகு மாரியம்மனுக்கு அபிஷேக ஆராதனைகளும் தமிழர்ச்சனையும் நடைபெற்றன. மன்ற அமைப்பாளர் திரு. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரையும், திரு. S. காளியப்பன் B. A., B. T., அவர்கள் தலைமையுரையும் நிகழ்த்தினர். திரு. இராச. குழந்தைவேலன் M. A., திரு. C. R. தேவராசன் B. Com., ஆகியோர் முறையே 'எறிபத்த நாயனர்', 'அப்பரின் செப்பரிய திறம்' என்ற தலைப்புக்களில் சமய விரிவுரையாற்றினர். மன்றக் காப்பாளர் திரு. கதிர்வேலு அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் :

# மணிமேகலைக் கருத்தரங்கம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் சார்பில் ஆசிரியர் ஒன்பதாவது கருத்தரங்கு பிப்பிரவரி 8, 9 ஆகிய இருநாட்களிலும் அண்ணாமலைநகரில் சிறப்புற நடைபெற்றது. இவ்வரங்கிற்கு மணிமேகலைக் காப்பியம் முழுப் பொருளாகக் கொள்ளப்பெற்றது. மணிமேகலையின் பாத்திரங்கள், தெய்வங்கள், இயற்கைமிறந்த செய்திகள், யாப்பு, கதை வடிவம், சைவம், சாங்கியம், மணிமேகலையின் காலம் முதலான பல பொருள்கள்பற்றித் தமிழ்த்துறையாசிரியர் பதினெழுவர் ஆய்வுக் கட்டுரை படித்தனர். பல்கலைக் கழகப் பிறதுறைப் பேராசிரியர்களும், பிறதுறை மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் தம் வரவேற்புரையில், படிக்கும் காலத்திலேயே மாணவர்களிடையே ஆராய்ச்சித் திறனைப் பெருக்குவது இக்கருத்தரங்கின் நோக்கமென்றும், கலந்துரையாடலில் மாணவர்களும் கலந்து கொள்வதால் ஆசிரியர்களோடு அறிவுறவு ஏற்படுவதற்கு இத்தகைய அரங்குகள் வாய்ப்பளிக்கின்றன என்றும், கருத்தரங்குக் கட்டுரைகள் அச்சுருப்பெற்றால் ஏனைய அறிஞர்கட்கும் பயன்படுமெனவும் சொல்லினர். கருத்தரங்கினைத் தொடங்கிவைத்துத் தமிழில் தொடக்கவுரையாற்றிய துணைவேந்தர் டாக்டர் சா. ப. ஆதிநாராயணன் தமிழ்த்துறை இடையறாது நடத்திவரும் கருத்தரங்கினைப் பாராட்டியதோடு மாணவர்களுக்கு அறிவை வளர்க்கும் இந்த அறிவரங்குகளை ஊக்குவிப்பது பல்கலைக கழகத்தின் நோக்கமெனவும், மாணவர்கள் வினாக் கேட்கவும் ஆசிரியர்கள் பொறுப்பாக மறுமொழி கூறவும் நடக்கின்ற இக்கருத்தரங்கு இன்றைய கால வளர்ச்சி எனவும் எடுத்துரைத்தார்

மணிமேகலைக் கருத்தரங்கின் முதற்பகுதி 8—2—75 பிற்பகல் துணைப்பேராசிரியர் திரு. க வெள்ளைவாரணன் தலைமையில் நிகழ்ந்தது. டாக்டர். மு. கோவிந்தசாமி மணிமேகலையின் காலம் என்னும் கட்டுரையில் கி. பி 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த தர்மபாலர் அறவண அடிகளாக இருக்க வேண்டுமெனவும், மணிமேகலையில் வரும் தருக்க நூற் பகுதி திக்நாகர் எழுதிய நியாயப் பிரவேகத்தைச் சார்ந்திருக்கலாம் எனவும் இதன் காலம் கி. பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டா

கலாம் எனவும் சில சான்றுகள் காட்டியுரைத்தார். மகாவித்து வான் திரு ச. தண்டபாணி தேசிகர் நகர் அமைப்புகள் என்னும் கட்டுரையில் மணிமேகலை கூறும் சம்பாதிவனம், நாளங்காடி, மலர்வனம் என்பன இன்றுள்ள புள்ளிருக்குவேளூர், இலைமுது கூடம், பெருந்தோட்டம், சாயாவனம் ஆகிய இடங்களைக் குறிக்கும் எனவும் புகார் நகரின் வடக்கெல்லை சீகாழி வரை இருந்தது என்றும் குறித்தார். திரு. அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைப் பாத்திரப்பெயர்கள் என்னும் ஆய்வுத்தாளில் பாத்திரப்பெயர்கள் எழுவகையாக அமைந்துள்ளன என்பதை வகைப்படுத்திக் காட்டி இளம்பூதி என்றபெயர் அப்பூதி என்பதுபோல, திரு வெண்ணீற்றைக் குறிக்குமெனவும்; சாலி என்னும் பெண்பாற் பெயர்க்குச் சால என்னும் உரிச்சொல்லோ சாலி என்னும் நெல்லின் பெயரோ காரணமாக இருக்கலாம் எனவும் விரிவாக எடுத்துக்காட்டினர். திரு சி. வேங்கடபதி அரசியலறம் என்னும் ஆய்வுரையில் இல்லறத்தை நீக்குவது மணிமேகலையின் கருத்தன்று; பாலின்பத்திற்குரியராய பரத்தை மரபினரில் ஒருத்தியைத் துறவியாக்கித் தீயவர்களைத் தண்டிப்பதே இக்காப்பியத்தின் நோக்கம் எனக்காட்டினர். திரு. கொ. இலக்குமணசாமி மணிமேகலையில் சிலம்புச் செய்திகள் என்ற ஆய்வில் இருகாப்பியத்திற்கும் ஒப்பான கதைப் பகுதிகளை எடுத்துக்காட்டி, மாறுபட்ட சிலவிடங்களையும் சுட்டினர். மணிமேகலை புத்த மதத்தைச் சார்ந்தபின்னும் தலைமழியாது கூந்தலோடு இருத்தல், மதுரைமா தெய்வம் தோன்றியபின் மதுரையைத் தீயிட்டதாகக்கொள்ளுதல் கண்ணகியைத் தீவைத்த குற்றமுடையாளாகச் சாற்றுதல், கற்படிமத்தில் கண்ணகியொடு கோவலனும் காணப்படுதல் என்பவை அவர் குறிப்பிட்ட சில முரண்கள்.

9—2—75 முற்பகல் கருத்தரங்கு காலை 9-30 மணிக்குத் தொடங்கியது. விரிவுரையாளர் திரு. கொ. இலக்குமணசாமி தலைமையில் நிகழ்ந்தது. முற்பிறப்புக் கூறுகள் என்ற ஆய்வுரையைப் படித்த திரு வெ. பழநியப்பன் மறுபிறப்புக் கொள்கை சங்ககாலம் முதல் தமிழர்க்கு உடன்பாடு எனவும் மணிமேகலையில் முற்பிறப்பேயன்றி வருபிறப்பும் சொல்லப்படுகின்றது என்றும் தருமபதம் என்ற முத்தி முற்பிறப்பினை உணர்ந்தவர்களுக்கே உரியது என்பது புத்த சமயக் கொள்கை எனவும் புலப்படுத்தினர். மணிமேகலையிற் சைவம் என்னும் பொருட் கட்டுரையில் திரு. க. வெள்ளைவாரணன் சைவ வாதியின் கூற்றாக வரும் பகுதிகளில் சிவனுடைய இறைத்தன்மை முழுதும் சாத்தனரால் சுட்டப்பட்டுள்ளது. ஈசன் என்ற பெயர் சிவனுக்கே உரியது என்பது தெளிவாகிறது. நாவுக்கரசரும் மணிவாசகரும் சொல்லிய

பதியின் இலக்கணம் இவ்வரிகளில்புலப்படுத்தப்பட்டுள்ளது என மொழிந்தனர். கவின் கலைகள் என்னும் பொருள்பற்றிமொழிந்த திரு. செ. வைத்தியலிங்கம் புனையா ஓவியம், கண்கவர் ஓவியம், சித்திரைச் செய்கைப்படாம், கன்னித் தெய்வம் எனவரும் கலைக் குறிப்புக்களையும், பாவை என்ற சொல் சிற்பக் கலைக்கும் ஓவியக் கலைக்கும் பொது என்பதையும் சுட்டி, கட்டடக்கலை, கூத்துக்கலை, இசைக்கலைக் குறிப்புக்கள் இக்காப்பியத்தில் நிரம்பியிருப்பதைப் புலப்படுத்தினர். சாங்கியம் என்ற தலைப்பில் டாக்டர். கோ. கந்தசாமி மாத்துவருக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே சாத்தனர் சர்வதரிசன சங்கிரகம் பாடிய முதல் தத்துவப் பேரறிஞர் என்றும், பிரகிருதியின் இயல்பு, பரிணமம், ஒடுக்கம், புருடனின் இயல்புகள் முதலிய சாங்கியக் கொள்கைகளைச் சாத்தனர் எடுத்துக்காட்டியுள்ளார் எனவும் விளக்கினர். மணிமேகலைத் தெய்வங்கள் என்ற தலைப்பில் திரு. துரை. பட்டாபிராமன் மணிமேகலையில் வரும் தெய்வங்கள் பலவற்றைத் தொகுத்துக் காட்டி, சம்பாபதி, சிந்தாதேவி, தீவதிலகை முதலானோர் அறங் கூறும் தெய்வங்களாகக் காட்சியளிக்கின்றனர் எனச் சுட்டினர். மணிமேகலைக்குள் ஒரு காப்பியம் என்ற தலைப்பில் திரு. ஆறு. அழகப்பன் உலகில் பெருங்காப்பியங்களிலிருந்து புதிய வழிக் காப்பியங்கள் தோன்றியிருக்கின்றன என்பதற்குச் சான்றுகாட்டி மணிமேகலையிலிருந்து மூன்று வகைக் காப்பியங்கள் தோன்றுதற்கு மேலும் இடமுண்டு என வழிகாட்டினர்.

கருத்தரங்கின் மூன்றும் பகுதி பிற்பகல் 2-30 மணிக்குத் தொடங்கியது. தமிழ்ப்பேராசிரியர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் தலைமையேற்றார். உவமைகள் என்னும் தலைப்பில் திரு. சு. சாமிஐயா தனிச் செய்யுள் உவமைக்கும் தொடர்நிலைச் செய்யுள் உவமைக்கும் உரிய வேறுபாட்டினைக் காட்டி, தாமரை தண்மதி சேர்ந்ததுபோல என்ற உவமையின் ஆழத்தை எடுத்துக்காட்டினர். சித்திராபதி என்னும் பாத்திரத்தை ஆராய்ந்த திரு. சா. மு. பாலசுப்பிரமணியன் குலப்பற்றும், பொருட்பற்றுமே சித்திராபதியின் பரத்தை நோக்குக்குக் காரணம் என்றார். மணிமேகலையில் இயற்கையிறந்த செய்திகள் என்னும் தலைப்பில் கட்டுரை படித்த திரு. பூ. இராமசாமிப் பிள்ளை காப்பியங்களில் தெய்வங்கள் பங்கு கொள்வது எல்லாக் காப்பியங்களிலும் இடம் பெறும் இலக்கிய மரபு என்று கூறி இதற்கு ஆறு காரணங்களையும் வகைப்படுத்திக் காட்டினர். மணிமேகலையில் யாப்பமைதி என்ற ஆய்வியற் கட்டுரை படித்த திரு. ந. வீ. செயராமன் மணிமேகலையில் இருபத்தேழு காதைகள் நிலைமண்டிலமெனவும், மூன்று காதைகள் இணைக்குறளாசிரியப்பா எனவும் எல்லாப் பாக்களுமே 'என்' என்னும் ஈற்றால் முடிவனவெனவும், இந்த

ஈறு பிற்காலத்தாரால் சுட்டப்படவில்லை என்றும் கூறினர். மணிமேகலையின் கதை வடிவங்கள் என்ற தலைப்பினை ஆராய்ந்த திரு. இரா. இராமலிங்கம் நிகழ்ச்சிமுறையாய்வு என்ற அடிப்படையில் மணிமேகலைக் கதையை ஆராய்ந்து மூலக் கதை போலவே சில துணைக் கதைகளையும் சாத்தனர் படைத்துள்ளார் எனவும் இருமுனை மும்முனைக் கதைகள் இக்காப்பியத்தில் நிறையவுள்ளன எனவும் கதைசொல்லும் திறனில் ஆசிரியர்பால் ஒரு வகைக்குறை காணப்படுகிறது என்றும் எடுத்துக் காட்டினர்.

கருத்தரங்கின் பார்வையாளராக வந்திருந்த தமிழ் வட மொழி நிறுவன இயக்குனர் திரு. மு. அருணசலம் தமிழகத்திற்கும் கிரேக்க ரோமானிய நகரங்களுக்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்புக்குச் சான்று காட்டி, வணிகவுறவு போல பண்பாட்டு உறவும் இருந்தது என மொழிந்தார். மாணவர்கள் திரளாகக் கருத்தரங்கிற்கு வந்து இங்கு விஞக்கேட்கும் அறிவுடைமையைப் பாராட்டினர். முன்ஞள் ஆசிரியர் திரு. வி. மு. சோமசுந்தரம் பிள்ளை, உவமை, மணிபல்லவம், மணிமேகலை முதலிய சொற்களின் பிறப்பியலை ஆராய்ந்து காட்டினர்.

தலைமையேற்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் இக்காலத்திற்கு ஏற்ற சமுதாய அறங்களைக் கூறும் மணிமேகலைக் காப்பியத்தைப் பரப்பவேண்டும் எனவும், இக் காப்பியம் புத்த சமயத்தைக் கூறுவதாயினும், அதனைப் பரப்ப எழுந்ததில்லையெனவும், தமிழ் வளர்ச்சி, தமிழாசிரியர்கட்கும் தமிழ் படிக்கும் மாணவர்கட்கும் மட்டும் உரியதன்று. தமிழர்க்கெல்லாம் உரியது எனவும் அறிவுறுத்தினர். இறுதியில் திரு. சிவ. திருநாவுக்கரசு நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

---

## குத்தாலம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுகுழுவினரின்

## சப்தவிடங்க தலயாத்திரை.

குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக்கழகத்தின் அன்பர்கள் 63 பேர்கள் 16—2—75 அன்று தனிப்பேருந்து மூலம் சப்தவிடங்க ஸ்தலங்களான திருநள்ளாறு, நாகப்பட்டினம், திருக்குவளை, திருவாய்மூர், வேதாரண்யம், திருக்காரவாசல், திருவாரூர் முதலிய ஏழுஸ்தலங்களுக்குச்சென்று வழிபாடாற்றித்தரிசனம்செய்தனர் திருநள்ளாற்றில் தருமையாதீனக் கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தரிசனத்திற்கு வந்திருந்த அன்பர்களுக்கு பிரசாதங்கள் வழங்கினர்கள்.

# செய்திகள்

## குறுக்கையில்: மாசிமக ஏகதின உற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் மாசிமக ஏகதின உற்சவம் 25—2—73 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ ஞானம்பிகை உடனுய ஸ்ரீவீரட்டேசுவரருக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. அன்று மாலை பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா விசேஷ நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் நிகழ்ந்தது. திருவீதியுலாவின்போது ஆதீனத் தேவாரபாடசாலை ஆசிரியர் மாணவர்களால் திருமுறை இன்னிசை நிகழ்த்தப்பெற்றது. அன்று மாலை 6 மணி அளவில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர், புலவர் திரு இரா. செல்வக்கணபதி அவர்கள் "திருக்குறுக்கைத் தலச்சிறப்பு" என்னும் தலைப்பில் விரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் வழிபாட்டிலும், திருவீதியுலாவிலும் கலந்துகொண்டு வழிபட்டும் சமயச்சொற்பொழிவைக் கேட்டும் பயன் பெற்றனர்.

## திருபுவனத்தில்: குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயிலின் சந்நிதி வீதியில் உள்ள, தருமையாதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயத்தில் குருபூஜை விழா காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் மாகேசுவர பூஜையும் மாலை 6 மணி அளவில் சமயச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. வீ. சா. குருசாமிதேசிகர் அவர்கள் "பண்டாரசாத்திரங்கள்" என்ற தலைப்பிலும், பண்ணாராய்ச்சி வித்தகர், குடந்தை திரு. ப. சுந்தரேசனர் அவர்கள் "குருலிங்க சங்கம வழிபாடு" என்ற தலைப்பிலும், சமய விரிவுரையாற்றினர்கள். குருபூஜை வழிபாட்டிலும், மாகேஸ்வரபூஜை

யிலும், அன்பர்கள் பலர்கலந்துகொண்டும் சமயச்சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

## திருக்குவளையில் : நெல்மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீவண்டமரும்பூங்குழலாள் உடனுறை ஸ்ரீபிரமபுரீசுவரசுவாமி நெல் மகோற்சவம் 24—2—75 திங்கட்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. குண்டையூர்க்கிழார், பரவையார் மாளிகைக்குச் செந்நெல் அரிசி முதலியவற்றைக்கொடுத்தல், குண்டையூர்க்கிழார் இறையருளால் பெற்ற நெல் மலையை, ஆருருக்கு அட்டித்தருமாறு சுந்தரர் ஸ்ரீ கோளிலிப்பெருமானை வேண்டுதல் முதலிய காட்சிகள் இவ்விழாவில் நிகழ்ந்தன.

விழா நாட்களில் மாலை 6மணி முதல் சமயச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. 24—2—75 திங்கட்கிழமை திருவாரூர் வித்துவான் திரு. மு. இரத்தினதேசிகர் அவர்கள் "திருஞானசம்பந்தர்" என்றபொருள்பற்றியும், 25—2—75 செவ்வாய்க்கிழமை திருவாரூர் உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு சு. மு. சுந்தரராசன் அவர்கள் "சுந்தரர்" என்னும் பொருள் பற்றியும் சமயவிரிவுரையாற்றினர்கள். அன்பர்கள் பலர் விழாவில் கலந்துகொண்டு வழிபட்டும், சொற்பொழிவுகளைக்கேட்டும் பயன் பெற்றனர்.

மாயூரம் - வள்ளலார்கோயிலில்

## குருப்பெயர்ச்சி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் குருப்பெயர்ச்சி விழா 19—2—75 புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது குருபகவான், சனிபகவானுடைய வீடானகும்பராசியிலிருந்து தனது சொந்தவீடான மீனராசியில் பிரவேசம் செய்ததை முன்னிட்டு, ஸ்ரீ மேதா தக்ஷிணமூர்த்திக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. அன்று மாலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி. பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். பக்தர்கள் திரளாகவந்து ஸ்ரீமேதா தக்ஷிணமூர்த்தியை வழிபட்டு உய்ந்தார்கள்.

## குத்தாலத்தில் அறுமுகப்பெருமான் வழிபாடு

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஆறுமுகப்பெருமானுக்குத் தைமாதத்திலும், மாசிமாதத்திலும் கிருத்திகைநாட்களில் (22—1—75, 19—2—75) விசேஷ அபிஷேக ஆராதனைகள் திரு. பாலசுப்பிரமணியத்தின் பெருமுயற்சியாலும், பக்தர்களின் உதவியாலும் சிறப்பாக நடைபெற்றன. தைமாதக் கிருத்திகையன்று சகஸ்ரநாமார்ச்சனையும் சிறப்பாக நிகழ்ந்தது. பக்தர்கள் திரளாக வந்து வழிபட்டுப் பயன் பெற்றூர்கள்.

கடிதச் செய்தி:

## கடவுள் அருளால் கண்ணொளி பெற்றூர்!

நான் சென்ற டிசம்பர்மாதம் தருமையாதீன அருளாட்சியில் உள்ள வைத்தீசுவரன்கோயிலில் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானைத் தரிசித்தேன். அங்கு விபூதிப் பிரசாதங்களையும், திருச்சாந்துருண்டையையும் (பிரார்த்தனை செய்துகொண்டு வரும் பக்தர்களுக்குக் கொடுக்கப்படும் மண்ணுருண்டையாலாகிய மருந்து) பெற்று நாள்தோறும் அணிந்துகொண்டு பாதுகாப்பாக வைத்திருந்தேன். 18—1—75 அன்று துறையூருக்குப் பேருந்தில் சென்றேன். என் அருகில் உள்ள சந்திரபாலன் என்பவர் கண் சிகிச்சைக்காகத் திருச்சி செல்லும் செய்தி அறிந்தேன். வைத்தியநாதப்பெருமானை வணங்கி, கந்தர் சஷ்டிக் கவசம் பாராயணம் செய்து என்னிடம் இருந்த விபூதியையும் திருச்சாந்துருண்டையையும் கொடுத்து அணிந்துகொள்ளவும் உட்கொள்ளவும் சொன்னேன்.

மீண்டும் அப்பக்கம் சென்றபோது சந்திரபாலன் கண் ஒளி பெற்றதுபற்றிப் பேசிக்கொண்டனர். அருகில் உள்ளவரிடம் விசாரித்தேன். 'திருச்சிக்குக் கண் சிகிச்சைக்காகப் பேருந்தில் சென்றபோது, ஒருவர் விபூதி மந்திரித்துக் கொடுத்தார். அதை அணிந்துகொண்டபின், டாக்டர் வீடு செல்வதற்குமுன் கண் தெரிந்தது. அதுமுதல் அவர் விபூதியைப் பூஜையில்வைத்து வழிபட்டுவருகின்றூர்' என்று ஒரு பெட்டிக்கடைக்காரர் கூறினூர். அப்போது ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானின் விபூதி பிரசாதம் கொடுத்தது என் நினைவிற்குவந்தது என்று சேலம் நகரத் தெய்விகப்பேரவைச் செயலர் வா. மு. கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கிறூர்.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்
ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( ஆனந்தஹூ பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய )

( 15—3—75 முதல் 13—4—75 முடிய )

ஸ்ரீ ஆனந்தஹூ மாசிமீ 30உ சுக்கிரவாரம் சூரிய உதயம் முதல் 34 நாழிகை 32 விநாடிக்கு இரேவதி நக்ஷத்திரத்தில் பாலவ கரணத்தில் கன்னியா லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் உலக சுபிட்சத்தை முன்னிட்டு மீனராசி சங்கிரமணமாக பங்குனிமாதப் பிரவேசம் செய்கிறார். சங்கிரமண தேவதைக்ஷத்திரியனாகி சிவந்தவஸ்திர முடுத்தி, புலிவாகனத்தில் கட்க ஆயுதத்துடன் தெற்கு முகமாகச்செல்கிறார். அதன் பலன் உலகிலுள்ள பெரிய தேசம் சிறிய தேசங்களுக்கிடையே இல்லாததை உண்டுபோல் திரித்துக்கூறுதலும், அதனால் ஏற்படுகின்ற பாதகங்கள், ஸ்திரீஇனங்கள் சாது பிராமண பிரஜைகளுக்கு நேருகின்ற இன்னல்களுக்கான தீய சதிகள், தேசத் துரோகச் செயல்கள் முதலியவற்றிற்கு துஷ்டநிக்கிரகம் ஏற்படும். உலகெல்லாம் ஏற்பட்டுள்ள தர்மஸ்தாபனங்கள் செயல்படும். திருமடங்கள், ஆச்சாரிய பீடங்கள் சிறப்புற்று ஓங்கும். தேவாலயங்களில் சிறப்புப் பூசைகள் நடைபெற்று ஆஸ்திகம் பெருகும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2க்குரிய சுக்கிரன் நற்பல ஸ்தானங்களில் சஞ்சரிப்பதால் தன வசதியும், தான்ய வசதியும் பெருகும். குடும்ப நலப்பிரச்சனைகள் கட்டுக்கடங்கியதாக இருந்துவரும். 3க்குரிய புதன் நிலையால் பெருமை பொருந்திய பாக்கியத்தையும், தைரிய போக்கையும், இருணங்கள் தீர்ந்து சுமை நீங்கவும் செய்யும். 5க்குரிய சூரியன் 12ல் இருந்தாலும் 11ல் கிரகம் இருப்பதால் கண்யம்பொருந்தியவகையில் திரவிய சேர்க்கையை ஏற்படுத்தும். புத்திரர் புத்திரிகளுக்கு சுப விசேஷங்களைச் செய்துவைக்கும். மனைவியின் தேக நலம் நன்றாக இருக்கும். வாகன முடக்கம்

ஒரு புறமும், ஒருபுறம் வாகனத்தில் நவீன சாதன முதலீடும் ஏற்படும். தர்மகாரியச் செலவுகளும், தெய்வ புண்ணியச் செலவுகளும் ஆகும். எவுதும் சிரமம்போல் தோன்றி நன்மையை அளித்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இயந்திரம் போல் நடந்துவரும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

( இ. உ. ஏ. – ஒ. வ. வி வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய புதன் நிலையால் குடும்ப நலம் பெருகும். தனவசதி சரளமாக இருந்து வரும் வாய்சாதுரியத்தால் எக்காரியத்தையும் செயல்படுத்த இயலும். 4 க்குரிய சூரியன் நிலையால் இராசாங்கத்தில் நல்ல கௌரவத்தையும், இழந்த பாக்கியப் பதவி கைகூடுதலும் சுக சௌக்கியத்தையும் ஏற்படுத்தும். தாயாருக்கு உஷ்ணவாத நலிவுகாட்டி நீக்கும். வீடு கால் நடை வாகனத்தில் நஷ்ட பலனைக் கொடுப்பதாக இருந்துவரும். உடன் பிறந்தவர்களுக்கு பிரபலத்தையும் சௌக்கியத்தையும் ஏற்படுத்தும். மனைவி மைந்தர்களின் நலம் திருப்திகரமாக இருந்துவரும். ஆயினும் ஏழரையோன் அந்தமானதால் எதிலும் தற்காலம் குழப்பமான மன நிலைமையாகத்தான் இருக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புகழும் கண்ணியமும் இருந்து வரும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச. – கே. கோ ஹ )

மிதுனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக இருக்கும். சுக்கிரன் நிலையால் பணவசதியும் வெள்ளி பொன் முதலானவற்றில் ஆதாயபிராப்தியும் ஏற்படும். 3க்குரிய சூரியன் 10ல் வலுப்பெற்றும், காரகன் சஞ்சார பலம் பெற்றும் இருப்பதால்சகோதரர்களின்விசுவாசமும் அனுசரணைப்போக்கும் இருந்துவரும். அரசாங்கம் அல்லது ஓர்பிரபலஸ்தர் மூலமான நற்பலனடைவதற்குரிய மார்க்கம் ஏற்படும். 1, 4 க்குரிய புதன் இம்மாதம்11உக்குமேல்நீசபங்கம்அடைந்துவிடுவதால்எழுத்துத் துறையிலும் ஒப்பந்தம் லிகித தொடர்பு முதலியவற்றிலும் குழப்பமான நிலைமைபோல் காட்டி பின் இராசகிரஹத்தின் வலுவால் பிரபலத்துக்குவரும். பந்துக்களில் ஓர்சுபவைபவமும், விருந்து உபசார பெருமதிப்புக்களும் ஏற்படும். இராகு செவ்வாய் நிலையால் சத்துருக்கள் விலகுதலும் விபத்துக்களைச் சமாளித்தல் போன்ற நிலைமையையும் ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பிரபல கண்யத்தைக் கொடுக்கும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி - ஹு. ஹெ ஹோ. ட. - டி டு. டெ. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய சூரியன் 5ல் சென்று முதல் தேதியே சுக்கிரன் 0ல் வந்து விடுவதால் பணவசதி சரளமாக இருந்து வரும் பழைய கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல் காலாவதி முதலியன நிவர்த்தியாகி ஆதாரத்தை உண்டுபண்ணும். 3 க்குரிய புதன் நிலையால் சகோதரரில் ஒருவருக்கு உஷ்ணவாத நலிவு ஏற்பட்டு நீங்கும். 4க்குரிய சந்திரன் சஞ்சாரத்தால் சுக சௌக்கியம் மேலிடும். ஸ்திரீ தெய்வவழிபாடு, புண்ணிய காரியங்கள், சாஸ்திர நுட்ப ஆராய்ச்சி இவற்றில் ஈடுபடுத்தும். இம்மாதம் 19உக்குமேல் யந்திரவாகனத்தின் மூலம் ஓர் விபத்து ஏற்பட்டு தெய்வ சகாயத்தால் தப்பும். 6, 9க்குரிய குரு இம்மாதம் 26உக்கு மேல் ஓர் அரிய பலனைக்கொடுக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கெடுபிடியும் மிடுக்கான போக்குமாக இருக்கும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ – டோ. ட. டி டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிரமான பலனாக இருக்கும். 2 க்குரிய புதன் அஸ்தங்கனாக இருப்பதால் தன வசதி சீராக இருக்கும். 3 க்குரிய சுக்கிரன் நிலையால் சகோதர குடும்பத்தில் சுபமங்களமும் இம்மாதம் 26உக்கு மேல் மனோவருத்தமான சம்பவமும் ஏற்படச் செய்யும். செவ்வாய் நிலைமையால் இம்மாதம் 19உ க்குமேல் கணவன் மனைவிக்குள் மனோவேகமான போக்கும் இதயம் கண் இவற்றில் ரோகத்தையும் காட்டும். லக்கினாதிபதி சூரியன் குரு சேர்க்கையால் இராஜங்க அலுவல்களில் சிறப்பும் புத்திரர்களின் முன்னேற்றமும் பிரபு நேசம் முதலான கண்யத்தையும் ஏற்படுத்தும். சுக்கிரன் கேது நிலையால் நீர் சம்பந்த இயந்திர சாதன பிராப்தி ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சதியாளர்களின் மனம் வாடும்படி கடமைப்பணி நடந்து வரும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ பா. பி. – பூ. ஷ ண. ட. – பே. போ.

கன்னியா ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2 க்குரிய சுக்கிரன் இம்மாதம் முதல் தேதியே நற்பலஸ்தானத்திற்கு வந்தாலும் 5ல் உள்ள செவ்வாய் இம்மாதம் 19உ விலகிய பிறகு தன பாக்கியத்தைச் சிறப்பாக அளிக்கும். திருதிய அஷ்டமாதிபதியாகிய செவ்வாய் நிலையால் உள்ள

ரணவுபாதை வயிற்றுநோய் முதலிய சிரமபலன்களை இம்மாதம் 19உ நீங்கச் செய்யும். குருவின் நிலையால் மனை, கால்நடை வசதிகளுக்கு முயற்சியும் அனுகூல பிராப்தியும் ஏற்படும். புத்திரர் புத்திரிகளுக்கு ஓர் செலவை உண்டுபண்ணும். கணவன் மனைவியின் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவும். குடும்பத்தில் சுப விசேஷங்கள் நடைபெறும். 10க்குரிய புதன் சஞ்சாரத்தில் நீசபங்கம் அடைவதால் செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அற்பர் விஷமம் ஒருபுறம் இருப்பினும் தெய்வ சகாயத்தாலும் தக்கோராலும் நற்பலனை அளித்துவரும்.

## 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். 2க்குரிய செவ்வாய் மிச்சிரனாக இருப்பதால் தன வசதி சாதாரணமாக இருந்து வரும். சகோதர வகையில் சிரமமும், தாயாதியர் அல்லது புத்திரர்களால் அவசியமான செலவினங்களும், பாகப்பிரிவினைகளும் ஏற்படுகின்ற காலமாகும். 4-க்குரிய சனி பலவீனமாகி பூமிகாரகன் மிச்சிரன் ஆனதால் பூமி பலிதம் விருத்தியின்மையும், மாறுதல்களும் ஏற்படும். இளைஞர்களாயின் கல்வியில் விருப்பு வெறுப்பு கலந்த சூழ்நிலையும், வியாபாரம் வைத்தியம் சித்திரக்கலை முதலியதொழிலுடையார்க்கு பிரசித்தமின்மையால் கவலையுமாக இருக்கும். குடும்பத்தில் கோள்களும், கணவன் மனைவியிடையே மனஸ்தாபபோக்கும் ஏற்படினும் இம்மாத பிற்பகுதியில் ஒற்றுமை நிலவும். 11க்குரிய சூரியன் நிலையால் பூர்வப்பொருள்மூலம் ஆதாயங்களும் கண்ணியமும் ஏற்படும். விவகாரங்களில் ஒப்பந்த பத்திரமூலமான மூலதனங்களில் சாதாரண பலனாக இருந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பொறாமையாளர்களின் எதிர்ப்புகள் இருப்பினும் கடமைப்பணியின் செம்மையால் ஸ்திரமேற்படும்.

## 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நே. – நோ. யா. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். 2க்குரிய குரு நற்பல ஸ்தானத்தில் இருப்பதால் தனவசதி சிறப்பாக இருந்துவரும். தந்தை வழியில் ஓர் சொத்து பிராப்தியும் உள்ளது. சகோதரர்கள் முன்னேற்றமும் அவர்களின் விசுவாச சகாயங்களும் இருந்துவரும் சுக்கிரன் நிலைமையால் மனைவிக்கு ரோகம் காட்டி நீக்கும். புதன் நிலைமையால் வித்துவத்வ மேன்மையும், பந்து அம்மான்மாதுர் மூலம் எதிர்பாராத சலுகைகளும் நன்மைகளும் ஏற்படும். ஆயினும் மனவருத்த

சம்பவம் இடையில் ஏற்பட்டு பின் குரு நிலையால் ஆறுதல் ஏற்படும். கர்ம தர்மாதிபதிகளின் சஞ்சாரத்தால் இம்மாதம் 6, 7, 8 தேதிகள் நீங்கலாக மற்றைய காலங்களில் சுபிட்சபலனே நடந்து வரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பெருமையும் கண்யமும் மேலோங்கும்.

## 9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

( யே. யோ. ப. பி. – பூ. த. ப. ட. – பே. )

தனுர் ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமாரான பலனாகவே நடக்கும். 2, 3 க்குரிய சனி மிச்சிரனாக இருப்பதால் தனச்செலாவணி சிராகஇருந்துவரும் தன் வார்த்தையைப் பிறர் ஏற்காத நிலைமையும் குடும்பத்தில் அதிக செலவுமாக இருந்துவரும். இம்மாதம் 19உ 5க்குரிய செவ்வாய் வலுப்பெற்றாலும் வேதைக்கிரகத்தால் சகோதரர் குடும்பம் புத்திரர்களின் நலம் ஒரு புறம் முன்னேற்றமும் ஒருபுறம் மனோவாட்டமான நிலைமையும் அதிக செலவுமாக இருந்துவரும். 6க்குரிய சுக்கிரன் நிலையால் பெண்கள் சம்பந்தமான நிர்ப்பந்த நிலைமையும் அஜீர்ணம் போன்ற ஆரோக்கிய மின்மையுமாக இருக்கும். 9க்குரிய சூரியன் கோசார பல விபரீத வேதையாயினும் சனி பார்வை இராசாங்கப்பகையும் பொருளாதாரத்தில் மற்றவர் குறுக்கிடுவதால் மன சங்கட நிலைமையுமாக இருந்து பின் நன்மை தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முன் மந்த நிலைமையும் பின் முன்னேற்றமார்க்கமும் ஏற்படும்.

## 10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. – கி. கு. கெ. கொ. – க. கீ.

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சாதாரண பலனாக நடக்கும். 2க்குரிய சனி நற்பலஸ்தானத்தில் உலவுவதாலும் 2ல் புதன் இருப்பதாலும் தன வசதி நூதனமான வகையில் சுய பிரயத்தனத்தால் ஏற்படுவதாகும். சுக்கிரன் நிலைமையால் சுக சௌக்கியம் மேலிடும். ஸ்திரீ தெய்வபூசை முதலான தெய்வவழிபாடுகளும் சாஸ்திர ஆராய்ச்சியில் சிந்தனை செலுத்துதலும் ஆகும். வெண்மையான வஸ்துவில் நல்ல லாப பிராப்தியை உண்டாக்கும் கால்நடை வாகனம் பால் பாக்கியம் பெருகும். புத்திரர் புத்திரிகளுக்கு சுபமும் கல்விதேர்ச்சி முதலிய நற்பலன்களையும் கொடுக்கும். இம்மாதப் பிற்பகுதியில் வைசூரி போன்ற உஷ்ணபீடையைக்காட்டி நீக்கும். மாற்றூரால்

மனோவேக நிலைமையை உண்டுபண்ணும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அயர்வற்ற உழைப்பும் தக்க லாப பிராப்தியும் ஏற்படும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ சதயம் – பூரட்டாதி–¾

(கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா)

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனைக்கொடுக்கும். 2க்குரிய குரு நற்பலஸ்தானத்தில் இருந்தாலும் 12ல் செவ்வாய் இருப்பதால் பணம் வரவும் செலவுமாக இருக்கும். கல்வி, கலை, எழுத்துத்துறையில் அதிக முயற்சியில் சித்தியை உண்டாக்கும். இம்மாதம் 19உக்குமேல் செலவுகளும் சுமை போன்ற நிலைமையும் குறைந்து குடும்ப நலம் பெருகும். ஆயினும் தலைநோயும் இரத்தக் கொதிப்புப் போன்ற நலிவும் வந்து நீங்கும். புத்திரர் புத்திரிகளின் நலன் குறித்து மன ஆயாசம் ஏற்படினும் சமாளித்தல் ஆகும். 4க்குரிய சுக்கிரன் வாகனப்பிராப்தியையும் மனதைரிய திட சித்தத்தையும் கொடுக்கும். கணவன் மனைவியரிடையே ஒற்றுமை நிலவும். ஆயினும் மனைவிக்கு சிரநோய் போன்ற நலிவு ஏற்பட்டு நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கண்யம் மேலிடும். ஆயினும் உடலுபாதை போன்ற அசந்தர்ப்பத்தால் வேலை சுமந்து காணும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி9பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபபலனைத் தரும். 2க்குரிய செவ்வாய் நற்பலஸ்தானத்தில் உச்சம் பெற்றதால் ஏராள தன வசதி ஏற்படும். சிவந்தவஸ்து புஞ்செய் தானியங்கள் அதிக ஆதாயம் கொடுக்கும். 3க்குரிய சுக்கிரன் நற்பலஸ்தானத்தில் இருப்பதால் சகோதர சகோதரிகள் சௌக்கியத்துடனும், புகழுடனும், விளங்குவார்கள். பசு பால் கறவையும் சுகசௌகரியமும் நன்றாக இருந்துவரும். மனைவி புத்திரர்களால் ஒருபுறம் மகிழ்ச்சியும், ஒருபுறம் மன சங்கட நிலைமையும், ஓர் சுபகாரியச்செலவும்நேரும். கோர்ட்டுவழக்குகள் இருப்பினும்சந்திரா லக்னத்தில் உள்ள கிரக சேர்க்கையால் ஜெயானுகூலத்தை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லதுஉத்தியோகத்தில் பிரசித்தமும் அதிகாரத்துவமும் பொருந்தி சிறப்புப்பெறுவர்.